# திராவிடநாடு

2
அறு

## வாரீர்!

★

வீரர்கள் அணியாக
விரைவதைப் பாரீர்
விடுதலைப் படையுடன்
நடந்திட வாரீர் (வீரர்)

சேரனும் சோழனும்
செந்தமிழ்ப் பாண்டியனும்
சீருடன் ஆண்ட நம்
செல்வத் திராவிடத்தைப்
போர்முனை அறியாத
புல்லர்கள் ஆள்வதோ?
போற்றிப் புகழ்ந்து நாம்
பொறுமையாய் மாள்வதோ (வீரர்)

தென்னவர் நன்மையை
எண்ணிடா வடவர்
அந்நியர் என்பது
திண்ணமாய்த் தெரிந்தும்
இன்னமும் உணராமல்
ஏமாந்து வாழ்வதோ?
தன்னல நினைவினால்
தாயகம் தாழ்வதோ? (வீரர்)

—கருணாநந்தம்.



# ஹெலிகாப்டரும் இரதமும்!

**தம்பி,**

ஊரெல்லாம் ஒரே விழாமயம், பார்க்கிறாயல்லவா!! ஆசியாவின் ஜோதி வந்தார்—விழா காட்டப்பட்டது! ஒரு திங்களாயிற்று, இதோ பாபு ராஜேந்திர பிரசாத் பவனிக்கான விழா நடைபெறுகிறது! இது கண்டு மகிழ்வோரின் மனம், விழாக் கோலத்தைக் கலைத்துக் கொள்வதற்குள், புல்கானின் வருகிறார், பிரம்மாண்டமான விழா நடைபெற இருக்கிறது. அவருக்கு நடத்தப்படும் விழாவிலே இன்னின்ன வண்ணம் தெரிய வேண்டும் என்று திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கும் போதே, நேபாள நாட்டு மன்னரும் மஹாராணியாரும் வரவேற்கப்பட வேண்டிய விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பாலம் விமான நிலையத்தில் வரவேற்பு—குழந்தைகள் பூச்செண்டு அளித்தல் — முப்படைப் பிரிவினரைப் பார்வையிடல், நேரு பண்டிதரின் கைகுலுக்குதல், ராஜ கட்டம் சென்று காந்தியார் சமாதியில் மலர் சொரிதல், ஜனாதிபதியின் மாளிகையில் விருந்து, அதை அடுத்து பார்லிமெண்ட்டில் பேச்சு, அதை அடுத்து ஒரு விருந்து, பிறகு 'தாஜ்'மஹால் ஜும்மா மசூதி, தங்கக் கோயில் ஆகிய காட்சிகளைக் கண்டு வியப்படைதல், இடையிடையே இன்னிசை, நடனம்-பிறகு பக்ரா-நங்கல், சிந்திரி, சித்தரஞ்ஜன், இப்படிப்பட்ட 'க்ஷேத்திரங்களைக் கண்டு மகிழ்தல். பிறகு தெற்கே திருவிழாக்கோலம், திரும்பவும் டில்லியில் கோலாகலம், இறுதியில் வந்தவரும் பண்டிதரும் சேர்ந்து உலகுக்கு அறிக்கை வெளியிடுவது. இது 'விழா' முறையாக இருந்து வருகிறது! புல்கானினுக்கும் இதுதான், டல்லசுக்கும் இதுவேதான்!! நேபாள மன்னர் இந்தச் 'சுவை'யினை ரசித்துக் கொண்டிருக்கிறார், புல்கானின் வந்து போன பிறகு, சவுதி அரேபியா மன்னர், இந்தச் 'சுவைகளை'ப் பெறப் போகிறார். சவுதி அரேபிய மன்னர், உலகிலே உள்ள பெரும் பணக்காரரில் ஒருவர்! அவருக்குச் சொந்தமாக உள்ள எண்ணெய்க் கிணறுகள் மூலமாக மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 200 கோடி ரூபாய் வருமானம் வருகிறதாம். புல்கானின் 'விஜயம்' செய்து, அதன் பயனாக இங்கு 'சமதர்ம' மணம் நமக்கெல்லாம் மகிழ்வூட்டியதும், சவுதி அரேபிய மன்னர் வருவதும், அவருடைய 'விஜயம்' 'முதலாளித்துவ' மோகத்தை தேவைப்படுவோருக்கு ஊட்டுவதுமாக எவ்வளவு நேர்த்தியான முறையிலே அமைந்திருக்கிறது பாரீர், பாரதப் பண்பாடு. எதற்கும் இடம் உண்டு, எதுவும் எதனுடனும் இருக்கும், இது இன்னார்க்கு உரியது என்று இராது.

பர்ணசாலை என்றால், அங்கு, பஞ்சேந்திரியங்களைக் கட்டுப்படுத்தவும், மூவாசையைத் துறந்திடவும் மூலத்தை உணர்ந்திடவும், முறையும் நெறியும் கிடைக்கும் இடம் என்றுதான் கூறுவர் — பாரதப் பண்பாடு அப்படி அல்ல!—இங்கு பர்ணசாலையில், துஷ்யந்தன் சகுந்தலையை அடைகிறான்! நல்லது மட்டுமே சொல்கிறேன், கல்லான கதையை விட்டுவிடுகிறேன். அந்த நாள் தொட்டு இந்த நாள் வரை எது செயல் முறை, எதைக்கொள்ளல் வேண்டும், எதைத் தள்ளிட வேண்டும், என்பதைப்பற்றி அதிகமான அளவு அக்கரை காட்டாமல், கிடைப்பதை இருப்பதுடன் சேர்த்துக்கொள்வதும், 'பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று' என்று திருப்தி அடைவதுமாகவே காலந்தள்ளி வந்திருக்கிறார்கள்; இதைப் பெருமைக்குரியதாகவும் போற்றிப் புகழ்கிறார்கள்.

பிரிட்டிஷ்-அமெரிக்க முதலாளிகள் திட்டவட்டமாகக் கூறுகிறார்கள், 'இந்தியா' தொழிற்கூடமாவதற்கான முயற்சிக்குப் பணம் பெரும் அளவுக்கு நாங்கள் போடத் தயாராக இருக்கிறோம் — ஆனால், தொழில்களைத் தேசீய உடைமை ஆக்குவது என்ற திட்டமோ, அன்னிய நாட்டாருக்கு இங்கு பொருளாதாரத் துறையிலே ஆதிக்கம் இருத்தல் ஆகாது என்ற திட்டமோ கிடையாது என்று எங்களுக்கு உறுதி அளிக்கப்படவேண்டும்.

தொழிலில் கிடைக்கும் இலாபத்தை எங்கள் நாட்டுக்குக் கொண்டு செல்வதற்குத் தங்கு தடை இருக்கக்கூடாது— என்று கேட்கிறார்கள்.

அமெரிக்காவில் உள்ள பாரதப் பிரதிநிதியும், இங்குள்ள நிதி மந்திரியும், 'ததாஸ்து' —என்கிறார்கள். அதாவது, அன்னியநாட்டு முதலாளிகளின் இலாப வேட்டைக்காடாக இந்த நாட்டை குத்தகைக்கு விடுவதற்குச் சம்மதிக்கிறார்கள்.

அதேபோது, ஆவடித் தீர்மான மூலம், சமதர்மம் அளிப்பதாக நாட்டு மக்களுக்கும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.

இந்த முரண்பாடு சரியா என்று கேட்டாலோ, இதுதான் பாரதப் பண்பாடு, நாங்கள் மிகச் சிரமப்பட்டுக் கண்டறிந்துள்ள 'சீலம்' என்றும் பேசுகிறார்கள்.

புல்கானினும் வருகிறார், சவுதி அரேபிய மன்னரும் வருகிறார்; இருவருக்கும் விழா; இருவரும் குதூகலமடைகிறார்கள்; இருவருக்கும் நேரு பண்டிதர் நண்பர்!

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

மலர் 14] 20–11–55 [இதழ் 20

# முதல் வேலை!

★

அந்த வேலையைச் செய்ய யார் தடையாக இருக்கிருர்களோ தெரியவில்லை? அமெரிக்கா, பணம் தரமாட்டேன் என்கிறதா! காமன் வெல்த் நாடுகள் கையைப் பிடித்துத் தடுக்கிறதா! இரஷ்யா, ஓடிவந்து கூடாதெனக் கூவுகிறதா! செஞ்சீனு, பயமுறுத்துகிறதா!–அல்லது உள்நாட்டிலுள்ள மக்கள்தான், "உத்தமர்காள்! உதவாது, உதவாது, அப்படியெல்லாம் செய்யக்கூடாது" என்று சொல்கிருர்களா, எது காரணம் என்பது மட்டும் தெரியவில்லை. அடிக்கடி இப்படியே கர்ச்சனை செய்கிருர்கள், காங்கிரஸ் தலைவர்கள். தலைவர்களது பட்டியலில் நேருவின் 'ஆசி'யால் இடம் பெற்ற காங்கிரஸ் தலைவர் தேபரும், மதுரைமா நகரில் நடைபெற்ற கூட்டமொன்றில், அதே விதமாகக் கர்ச்சனை செய்துள்ளார்—வறுமையை ஒழிப்பதே இப்போதுள்ள முதல் வேலையாம்! ஏழெட்டு ஆண்டுகளாக, இப்படிச் சொல்லிக்கொண்டிருப்பதே, காங்கிரஸ் பீடதாரிகளின் வேலையாயிருக்கிறது. ஆச்சாரியார் சொன்னுர் பண்டித நேரு முழக்கமிட்டார்–காலம் சென்ற பட்டேல் கர்ச்சனை செய்தார்–பிரகாசம் பேசினுர்—ஓமந்தூரார் தெரிவித்தார்—குமாரசாமியார் கூறினுர்—இப்போதுள்ள காமராஜரும் சொல்கிருர்; வறுமையை ஒழிப்பதே முதல் வேலையாம்!

ஏழெட்டு ஆண்டுகளாக இதே பல்லவிதான்! எனினும் வறுமை ஒழியவில்லை–ஒழியாவிட்டாலாவது போகட்டும், அடியோடு — கொஞ்சமாவது தொலைந்துள்ளதா என்று கேட்டால், அழுதுமடியும் விவசாயியின் வேதனையும், தீபாவளி கொண்டாட காசில்லாததால் கூவம் நதியில் விழுந்து மடியும்வேலையில்லாதவனின் வேதனையும், 'போனஸ்' கொடுக்காததால் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளியின் குமுறலும் தான் தெரிகிறது. கொஞ்சம்[redacted]டக் குறையவில்லை. மறையவில்லை!! அன்பர் தேபர், ஆர்வத்தைக் குழைந்தெடுத்து, அன்பு ததும்பும் வார்த்தைகளில் சொல்கிருர் — இப்போதுள்ள முதல் வேலை வறுமையை ஒழிப்பதுதானும்!

இப்போதுள்ள முதல் வேலை என்கிருரே—இதுவரையில், இந்த வேலையைச் செய்வதாகத்தானே, ஒவ்வொரு தடவையும் கூறிவந்தார்கள்!! தலைவர்கள்! எனினும், இன்னும் 'இதுவே முதல் வேலை! முதல்வேலை! என்று சொல்லும் கட்டத்திலுள்ளது என்ருல் இந்த வேலையைச் செய்யத் தடையாயிருப்பது யார்? எதிர்க்கட்சிகள் வறுமையை ஒழிக்கக்கூடாது, என்று கச்சை கட்டியதாகக் காட்ட முடியுமா? அல்லது, எதெதையோ செய்யப் போவதாகச் சொல்லி இவர்கள் கிட்டி கட்டி வரிகள் கேட்டபோதுதான் கொடுக்காமலிருந்தார்களா?

மற்ற நாடுகளிலாவது, தலைவர்கள் சொன்னுல் தட்டக்கூடியவர்களிருந்தார்கள்–பாரத புண்யபூமியில், பகவான் என்பவருக்கு அடுத்த இடத்தில் வைத்துத்தானே போற்றுகிருர்கள் நேரு பண்டிதரை? இங்குள்ள காமராஜருக்குள்ள செல்வாக்குதான் சாதாரணமா? அவர் கையசைத்தால், உட்காரக்கூடிய நிலையில்தானே, அத்தனை எம். எல். ஏ.க்களும்!

இப்படிப்பட்ட அபரிமித செல்வாக்கும், எண்ணியதைச் சாதிக்கும் வல்லமையுமிருந்தும், இன்னும் 'வறுமையை ஒழிப்பதுதான் முதல் வேலை' என்று சொல்லக்கூடிய நிலைமை நீடிப்பதேன்? கேட்டதற்கெல்லாம் அமெரிக்கா கடன் கொடுக்காமலிருந்ததா? காமன்வெல்த் நாடுகள் உதவ முடியாதென்று மறுத்ததுண்டா! சுதந்திரம் பெற்ற நாள்முதல், வேறிடங்களில் வேண்டுமானுலும் வெளி நாடுகளுக்கு சிரத்தையில்லாதிருந்ததே ஒழிய இந்தியாமீது காட்டிவரும் ஆசைக்கும் பற்றுக்கும் அளவே கிடையாதே. உலகமே, நேருபண்டிதரின் சொல்லுக்கு ஆடுவதாகச் சொல்லி அவர்களே பெருமைப்பட்டுக் கொள்ளுகிருர்களே. அப்படியிருக்கும்போது, என்னுட்டில் வறுமையை ஒழிக்கப்போகிறேன்! 36-கோடி மக்களுக்கும் முழு உணவு தரப்போகிறேன் அதற்கு நீங்கள் இன்னின்ன உதவிகள் அளிக்கவேண்டும்—உதவிகளைக் கொண்டு நான் பார்த்துக்கொள்கிறேன் — ஏனெனில், என்னுடைய தேசத்தில் உழைப்புச் சக்தி ஏராளம் உண்டு; வேலையில்லாதவர்களாக அதிகம் பேர் கிடக்கிருர்கள்—நிலமும் வளமற்றதல்ல (மதுரைக் கூட்டத்தில் தேபரே சொல்கிருர். கனிச் செல்வம் இந்நாட்டில் நிறைய இருக்கிறதென்று)— ஆகவே, வளத்தையும் உழைப்பையும் கொண்டுவாழ முடியும்! வகையும் வசதியும்தான் வேண்டும்—ஏதாவது உதவமுடியுமானுல் செய்யுங்கள்! என்று கேட்டிருக்கலாமே, அண்டை அயல் நாடுகளை!

அப்படிக் கேட்பதற்குப் பதில், அமெரிக்கா போய்வரலாம் — அவர்களுக்காகப் பரிந்து பேசலாமென்று சில ஆண்டுகளும்; பிறகு ரஷ்யாவை திருப்திப்படுத்த சில ஆண்டுகளும், அதே நேரத்தில்; இரண்டு வல்லரசுகளுக்கும் மேலாக நின்று தன்னுடைய புஜபல பராக்கிரமத்தைப் பற்றிப் பேசிக்கொள்வதில் காலவிரயமும் செய்தனரே! இல்லையென்று மறுக்க முடியுமா, யாராலும்? இதோ, நமக்குப் பிறகு விடுதலை பெற்ற சீனம் எப்படி நம்மைவிட வளமுள்ளதாக விளங்குகிறது? வெளிநாட்டு உதவிகளைக் கூட அது விரும்பவில்லையாமே! எப்படி அதனுல் இவ்வளவு சிறப்பாக உலக அரங்கில் நடைபோட முடிகிறது? "ஓ! ஓ! எங்களுக்குத் தெரியாதா? சீனுவுக்கு ரஷ்யாக்காரர்கள் எவ்வளவு உதவி செய்தார்கள் தெரியுமா? அதுபோல நமக்கு எங்கே அமெரிக்காக்காரர்கள் அளித்தார்கள்? என்று கூறக் கூடும் தேசியத்தலைவர்கள். சீனத்தைப்போல நாமும் அன்றே மாஸ்கோவை நாடியிருந்தால் என்ன? அப்போது துப்பாக்கியல்லவா பேசிற்று—சுட்டு அல்லவோ பொசுக்கினுர்கள், கம்யூனிஸ்டுகளை. சகலமும் அமெரிக்காவிடமிருந்து கிடைக்கும் என்றன்ருே பேசினுர்கள்! ஆகவே, சீனு, ரஷ்யாவால் சிறப்புற்றதென்ருல் அதேசிறப்பை இந்தியாவும் அடையத் தடையாயிருந்தது இவர்களன்றி வேறு யார்?

வறுமையை ஒழிப்பதுதான் முதல் வேலை என்று இன்றும் சொல்கிருர்கள்—அதற்குக் காரணமாக அதோ அணைக்கட்டு, இதோ இரஷ்யா அளிக்கும் இயந்திரங்கள் என்று காட்டுகிருர்கள். அன்றும் அமெரிக்கா அளிக்கும் உதவி வறுமையை ஒழிப்பதற்காக—பஞ்சம் பட்டினியை நீக்குவதுதான் எமது முதல் வேலை என்று கர்ச்சிக்காத காங்கிரஸ் தளபதிகள் யார்? ஒருவர்கூடக் கிடையாதே! இருந்தும், ஏன் அந்த வேலை நடைபெறவில்லை? ஆண்டுகள் எட்டாகிய பின்னரும், 'வறுமையை ஒழிப்பது குறித்து' சங்கநாதமட்டும் செய்யப்படுகிறது?—என்று சிந்திக்கும்போதுதான் இவர்களது சுயரூபம் வெளியாகிறது.

வறுமையை ஒழிக்கவேண்டிய வசதிகளைப் பெறும் வாய்ப்பு உண்டு இவர்களுக்கு — மக்களின் பலத்த 'மெஜாரிடி'யும் உண்டு–அதைக் கொண்டு எதையும் செய்யமுடியும் இவர்கள். எனினும் செய்யவில்லை, ஏன்?

இவர்களைத் தடுக்க யாரும் கிடையாது. உதவி கேட்டாலும் அளிக்க ஆளில்லாமலில்லை. இருந்தும், அத்திசை நோக்கிச் சிந்தையைத் திருப்பாத காரணம், இயலாது என்பதல்ல; சீமான்கள் சீறுவார்

களே! பூமான்கள் கோபிப்பார்களே! பள்ளத்தை நிரப்பவேண்டுமென்றால் மேட்டை வெட்டி வீழ்த்தவேண்டுமே— அப்போது மேட்டுக் குடி சீறுமே. என்ன செய்வது? எனும் ஒரே காரணத்துக்காக, இத்தனை நாட்களும் அத்திசை திரும்பவில்லை.

இப்போதாவது அந்த அறிகுறி தெரிகிறதோ எனின், ஐயமே எழும்புகிறது — தேபர் வறுமையை ஒழிப்பதே முதல் வேலை என்று வெளியிடக் காரணம், தேவிகுளம் பீர்மேடு குறித்து நாமெல்லாம் கிளர்ச்சி செய்கிறோமல்லவா? அதனால்தான். "இதெல்லாம் மிக மிகச் சாமான்யமான பிரச்னைகள், இவைகளில் கவனத்தைச் செலுத்தாதீர்கள். இப்போதுள்ள முதல் வேலை வறுமையை ஒழிப்பதுதான். அதற்காகத் திரண்டு வாருங்கள்" என்று தெரிவித்துள்ளார். தேவிகுளம், பீர்மேடுபற்றி கேட்கிறார்கள் மக்கள்! அவர்கள் கவனத்தைக்கவர, 'வறுமை' யைக் காட்டுகிறார், தேபர். 'இதுபோல ஏதாவது ஒரு பிரச்னை எரிமலையாகிறதென்றால், அப்போது ஏதாவது ஒரு பிரச்னைக்கு கவனத்தைத் திருப்ப வறுமையும் பஞ்சமும் கிடைக்கிறதே ஒழிய—எண்ணத்தில் தூய்மையில்லை. அது இருந்தால், என்றோ இதற்கோர் பரிகாரம் கண்டிருக்கமுடியும்.

வறுமையை ஒழிப்பதுதான் இப்போதுள்ள முதல் வேலை-என்கிறாரே தேபர்—எப்படி வறுமையை ஒழிக்கப் போகிறோம் என்பதற்கு திட்டமேதும் தந்தாராவெனில், அதுதான் இல்லை. பேசினார் பிரமாதமாக, "தேவிகுளம் பீர்மேடா பெரிது? வறுமையல்லவோ!" என்று முழக்கமிட்டார்-அவ்வளவுதான்.

இப்படி அடிக்கடி பேசுவதற்கு பதில் வறுமையை ஓட்டும் வேலைகளில் உண்மையாகவே இவர்கள் ஈடுபட வேண்டும். அதற்கு, நெஞ்சிலே தூய்மை வேண்டும்-பிரபுக்களுக்குப் பல்லிளித்து, அவர்களைக் காங்கிரசில் சேர்ப்பதே 1955ம் ஆண்டு தேசபக்தி எனும் மனோபாவம் மாறவேண்டும். அத்தகைய பக்குவத்தை தேசீயத் தலைவர்கள் அடையவேண்டுவதே முதல் வேலை! முழக்கம் செய்துகொண்டே போவதல்ல!!

★

## தோழர் ஏ. கோவிந்தசாமி

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தோழர் A. கோவிந்தசாமி M. L. A. 5—11—55-ல் இல்லம் சேர்ந்தார். கடலூரிலுள்ள அவருடைய இல்லத்தில், தங்கியிருந்து ஓய்வு பெறுவார்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

சவுதி அரேபியா மன்னர் விஜயம் செய்வது தவறு என்று கூறுவதற்காக இவ்விதம் எழுதவில்லை. எந்த ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கும் நேர்மையான தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளாமலேயே, எவரிடமும் இன்முகம்காட்டி, எதற்கும் இசைவு அளித்துக்கொண்டு செல்லும் போக்கிலே நாடு நடத்தப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டவே இதைக் கூறுகிறேன்.

**கடவுள், மனிதனின் சிருஷ்டி! மதம், மனிதனிடம் ஏற்படுத்தப்பட்ட மனமயக்கம்.**

என்று சென்ற திங்கள், மாஸ்கோ 'ரேடியோ' தெரிவித்தது என்று இங்குள்ள ஏடுகளெல்லாம் அறிவித்தன!

அந்த நாட்டு புல்கானின் வருகிறார் — அவருக்குக் கல்கத்தாவில் இராமாயணம் நிழல் நாடகமாக உதய சங்கர் நடனக் குழுவினரால் நடத்திக் காட்டப்பட ஏற்பாடாகி இருக்கிறது.

ஒரு பெரும் தலைவருக்கு பொழுதுபோக்குக்காக நடத்திக் காட்டப்படும் 'காட்சி'யைப்பற்றி, நான் வலிந்து பொருள் கொள்வதாகக் கருதாதீர்கள். காரணமின்றி அல்ல, இராமாயணம் காட்டப்படுவது!

காளிதாசரின் 'சாகுந்தலம்' காட்டப்பட்டால், இளங்கோவின் சிலப்பதிகாரம் காட்டப்பட்டால், இதுபோல் ஒவ்வோர் மொழியிலும் உள்ள கலை ஓவியங்கள் காட்டப்பட்டால், வெளிநாட்டுத் தலைவருக்கு இந்நாட்டுக் கலைக் காட்சி நடத்திக் காட்டப்படுகிறது என்று பொருள்கொள்ளலாம். நடத்தப்படுவது இராமாயணம்!

இதுபோலவேதான், 'பாரதப் பண்பாடு' பல்வேறு முனைகளிலும் தலைவிரித்தாடுகிறது.

டில்லிப் பட்டிணத்தில், ஆசியா கண்டத்திலேயே இதுவரை இப்படிப்பட்ட ஓர் பிரம்மாண்டமான காட்சி நடத்தப்பட்டதில்லை என்று எவரும் வியந்து கூறத்தக்கதான 'பொருட் காட்சி' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவும் ரஷியாவும் பிரிட்டனும் பிற நாடுகளும், தத்தமது தொழிற்திறமையை, விஞ்ஞானமுன்னேற்றத்தைவிளக்கிடும் வகையில் பொருள்களைக் காட்டியும், பொருள்செய் முறைகளை விளக்கியும் பொருட் காட்சியில் இடம்பெற்றுள்ளன. காண்போர், முற்போக்கு நாடுகள் தொழில் துறையிலே எவ்வளவு ஆச்சரியகரமான முன்னேற்றமடைந்துள்ளன என்பதைப் பாராட்டுகின்றனர். நேரு பண்டிதர், இந்தப் பொருட்காட்சியின் தத்துவத்தை விளக்கி விரிவாகப் பேசியுமிருக்கிறார்; இலட்சக்கணக்கான மக்கள் சென்று காண்கின்றனர்.

கண்ணாடி மனிதன் என்றோர் காட்சிப் பொருள் அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

கண்ணாடியால் செய்யப்பட்டுள்ள மனித உடல்! மனித உடலுக்குள்ளே என்னென்ன உறுப்புக்கள் என்னென்ன முறையிலே அமைந்து, எவ்வகையிலே இயங்குகின்றன என்பதை' கண்ணாடி மனிதன்மூலம் பாமரனும் கண்டறியலாம். இரத்தக் குழாய்கள் தெரிகின்றன. இரத்தம் எப்படி எப்படி ஓடுகிறது என்பது காட்டப்படுகிறது. இதயத் துடிப்பு, மூளையின் அமைப்பு, நரம்புகளின் புடைப்பு – எல்லாம் தெளிவாகத் தெரிகிறது, கண்ணாடி மனிதன் மூலம்!

பொருட்காட்சியிலே இந்த விஞ்ஞானப் பாடம் அளிக்கப்பட்டு வரும் இதே நேரத்தில் 'பாரதத்தின்' மற்றோர் பகுதியில், வேதகாலத்து இரதங்கள் ஓடுகின்றன! அதை இலட்சக்கணக்கான மக்கள் கண்டு களித்து ஆரவாரம் செய்கின்றனர்.

விஞ்ஞான அறிவளிக்கும் பொருட் காட்சியை நேரு பண்டிதர் திறந்து வைக்கிறார்—இந்த வேதகாலக் காட்சியைத் துவக்கிட, பம்பாய் கவர்னர் மேதாப் முன் வருகிறார்.

உலகில் சாந்தி சமாதானம், சுபீட்சம், ஆகியவை ஏற்பட, ஐ. நா. சபை, நால்வர் மாநாடு, ஜினிவா மந்திராலோசனை, பாண்டுங் முயற்சி, நேருவின் பஞ்சசீலம், இவை ஒன்றும் முறையாகாது— கோடிக் கணக்கான மக்கள் சமாதானம் கோரலாம், பல்லாயிரக் கணக்கான மைல்கள் பறந்து சென்று பண்டிதர் உலக சமாதானம் பற்றி உள்ளத்தை உருக

(13-ம் பக்கம் பார்க்க)

# ஏழுமலை ஏறினாலும்......

சவுண்டிகளுக்குப் பயன்பட்டு வரும், சமஸ்கிருதத்தைப் 'பீடத்தில்' அமர்த்தி அழகு பார்க்க இதுதான் பொன்னான சமயம என்று பண்டிதர்களுக்குக்கூட அல்ல, பழைய பஞ்சாங்கங்களின் பாதுகாப்பாளராகி அதன் பயனாகத் தமது 'பரிபாலனத்தை'ச் செலுத்தலாம் என்று பகற்கனவு காணும் சில பழங்களுக்கு ஆசை தோன்றிடவே திருப்பதியில் இதற்காக ஓர் மாநாடு கூட்டினர்.

மாநாடு கூட்டுவரா? 'பரிஷத்' கூட்டினர்! பாபு ராஜேந்திர பிரசாத் 'விஜயம்' செய்தார்.

ஏழுமலை ஏறி எம்மானைக் காண வேண்டும்.

இதிலென்ன கஷ்டம்? ஏழுமலை ஏறினால் உயிரா போய்விடும்!!

எனவே, ஏறினர்,

ஏன் ஏறப்போகிறார்கள்? மோடாருக்கான பாதைதான் இருக்கிறதே. மேலும், மகத்தான ஒரு திருப்பணிக்காக முழங்காற்படியிட்ட வண்ணம், அல்லது ஊர்ந்து செல்வதாயினும் செய்துமுடிக்கும் திடசங்கற்பம் கொண்டவர்களன்றோ கூடினர்.

"ஏறாத மலைதனிலே...ஜோராக ......" என்று பாடிவிடாதீர்கள்— இவர்கள் சென்றது, சத்காரியத்துக்காக, சாமான்யத்திற்கு அல்ல.

பட்ட மரம் துளிர்க்கவேண்டும் என்பதற்கா?

படர்ந்துபோன விளக்கினை மீண்டும் சுடர்விடச் செய்யவா?

சிதைந்த சித்திரத்தைச் செப்பனிட்டுப் புதுப்பிக்கவா?

தூர்ந்து கிடக்கும் அகழியைத் துப்புரவாக்கவா? என்று கேட்பீர். இவைகள் மிக மிகச் சாதாரண காரியம் — இவ்வளவு பெரியவர்கள் இவ்வளவு சாதாரண காரியத்துக்குச் செல்லமாட்டார்கள்—அவர்கள் சென்றது, சமஸ்கிருத மொழியை மீண்டும் அரியாசனம் ஏற்றுவதற்கு!

ஓஹோ! பிணத்துக்கு உயிரூட்டும காரியம் என்பீர்கள்.

ஆமாம், பிணத்துக்கு உயிரூட்டி அதற்குப் 'புது வலிவு' பிறந்திடச் செய்து, பிறகு அது நடமாடுவது கண்டு மகிழமட்டுமல்ல — நடமாட வைத்து, அதனைக் கொண்டு, 'தமிழ்' மொழியினை அழித்திடவும் எண்ணுகின்றனர்.

பகற்கனவு என்பீர்கள்.

பாதகரின் நினைவு என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

ஊரெல்லாம் கூடி, ஒருமுகமாக நின்று, ஐயகோ! அந்த அழகு மொழி, அமுத மொழி, ஆண்டவனுக்கு உகந்த மொழி, அரம்பை தேசத்து அழகிகளின அதரத்தில் தவழும் மொழி, வடமொழி, தேவ மொழியாம் சமஸ்கிருதம், வழக்கற்றுப் போயிற்றே, அதன் வண்ணம் காணாது வாட்டமுற்றுக் கிடக்கிறோமே, அம்மொழியினை மரணக் குழியில் தள்ளிவிட்டனரே மாபாவிகள்! மொழிகள் பலப்பல உள, செம்மொழி என்பர், எம்மொழி என்பர், என்ன கூறினும் **'அகல்யா! அன்பே!' என்று கௌதமனாக வடிவமெடுத்த இந்திரனும், "இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் எனும் எதை எதையோ காட்டினர், ஏதேதோ வழி கூறினர், சுகானுபவம் பெற, தாரா! ஆனந்தம் பெறும் மார்க்கம் இங்கே இருந்திடக் காண்கிறேன்! உன் கன்னத்திலே நான் காணும் சுவை எந்தச் சுலோகத்துக்கு உண்டு! சுந்தரியே! எனக்கு உண்மைக் குரு, நீதான்; நீயேதான்!" என்று சல்லாப சாஸ்திரத்தைத் தாரையிடம் கற்றுணர்ந்த சந்திரனும், எம்மொழியில் பேசினர்? வங்கத்திலா, துளுவிலா, மராட்டிய மொழியிலா, சங்கம் கண்ட மொழி என்று வினாரை கூறி வியக்கின்றனரே, அந்தத் தமிழிலா, அல்ல அல்ல; அல்லவே அல்ல! எமது ஆதிமொழி, ஜோதிமொழி, வடமொழி, தேவமொழியிலன்றோ!**

வருணா, வா! வாயுதேவா, ஓடி வா! அக்னி தேவனே ஓடோடி வா!— என்று கூப்பிட்டதும், விண்ணகத்துத் தேவர் மண்ணகம் நாடி, ஓடோடி வந்து, வரமளிக்க, குறை தீர்க்க, குற்றேவல் புரியவும் வைத்தது எம்மொழி? வடமொழி! எனவே, அம்மொழிக்கு உள்ள சிறப்பு வேறு எம்மொழிக்கும் கிடையாது. பிற மொழிகள், இலக்கணச்செறிவை, இலக்கியக்கவர்ச்சியைக் காட்டிப் பெருமைப்படலாம், வடமொழிபோல மூவரும் தேவரும் முனிவரும் பேசிய மொழி என்று கூறிட இயலுமோ! பர்ணசாலைகளிலும், பாகுமொழி பேசிய பாவையர் ஆடிப் பாடி மகிழ்வூட்டிய இந்திரலோகத்திலும் வழிந்ததுவடமொழியன்றோ! அத்தகைய ஓர் அற்புதமான மொழியை, இன்று வழக்கற்றுப்போகச்செய்துவிட்டனரே வன்கணாளர்கள்—என்றெல்லாம் பேசி, இனி அந்தத் தேவ மொழியைத் தேசிய மொழியாக்குவோம், மீண்டும் எங்கும் அந்த மொழி ஏற்றம் பெற்று விளங்கும் வகையில் கொற்றம் கொண்டோர் திட்டம் தீட்ட

டும், இல்லையேல் அவர்களைச் சுட்டுச் சாம்பராக்குவோம்! சுட்டுச் சாம்பராக்க, நமது கோபப்பார்வை போதும் — என்று நாட்டு மக்கள் கொதித்தெழுந்திருப்பது போலவும், ஐந்தாண்டுத் திட்டம் என்கிறீர்கள் அணையும் தேக்கமும் காட்டுகிறீர்கள், தொழில் வளரும் செல்வம் பெருகும் என்று வாக்களிக்கிறீர்கள்—என்ன பயன் — இவையா எம்மை மகிழ்விக்கும்? கேடு தீரவும் நாடு வாழவும் இவை போதுமா? செல்வம் கொழித்தால் என்ன, சிங்காரம் தவழ்ந்தால் என்ன, தேவமொழி அழிந்துபட்டுக் கிடக்கிறதே, அதனை உயிர்ப்பித்து, மீண்டும் அரியாசனம் அமர்த்தினாலொழிய எமக்குக் களிப்பு உண்டாகுமா, எது இருந்து என்ன பயன், எமக்கு சமஸ்கிருதமல்லவா வேண்டும், உடனடியாக இதனைக் கவனியாமல், ஏழை எளியவருக்கு இதம் தேடுகிறோம், இல்லாமை போதாமையை விரட்டுகிறோம், எழிலைக் காட்டுகிறோம் இன்பத்தைக் கூட்டுகிறோம் என்றெல்லாம் பேசுகிறீர்களே, உடனடியாக, எமக்கு உயிர்க்குயிரான சமஸ்கிருத மொழிபற்றி அக்கறை காட்டி, ஆவனசெய்ய முன்வாருங்கள் என்று நாட்டுமக்கள் நாலா பக்கங்களிலுமிருந்து, ஜாதி மதம் கட்சி எனும் எதையும் பொருட்படுத்தாமல், ஒருமுகமாக நின்று பலத்த கிளர்ச்சி செய்வது போலவும், அந்தக் கிளர்ச்சித் தீ கொழுந்துவிட்டு எரிவது கண்டு இனி இதைக் கவனியாமலிருப்பது அழகல்ல, என்று துரைத்தனத்துத் தூயமணிகள் தீர்மானித்துவிட்டதுபோலவும், வேறு வழியின்றி இப்படி ஒரு மாநாடு கூட்டப்பட்டதுபோலவுமிருக்கிறது, இவர்தம் செயல்.

அக்கரை காட்டவேண்டிய பிரச்சினைகள் ஆயிரம் இருக்க, இந்த ஆரிய மொழிக்கு ஓர் மாநாடு கூட்டிட முன்வந்தது காணும்போது, ஆச்சரியப் படவேண்டித்தான் இருக்கிறது.

வறுமையைத் துடைத்திட, வளம் கூட்டிட வழிவகை காண்பதற்காக, அவசரம் காட்டப்படக் காணோம்.

அறியாமையை அகற்றிட அக்ரமத்தை அழித்திட வழிவகை காண், மாநாடு நடத்தும் மகானுபாவர்களைக் காணோம்.

வடமொழி வாடிக் கிடக்கிறதாம், அதற்குப் புது வலிவு தேடிடக் கூடுகிறார்கள், பயபக்தி விசுவாசத்துடன்.

டில்லி ஏகாதிபத்தியம் ஏற்பட்டதும், 'ஆரியம்' புதுத்துணிவு பெற்றிருக்கிறது.

இனி என்றென்றும் தலைதூக்க முடியாது என்ற நிலைபோய், மீண்டும் தலை விரித்தாட ஒரு புது முயற்சி செய்வோம், வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்ற எண்ணத்துடன் ஆரிய பாதுகாவலர்கள் காரியமாற்றத் தலைப்பட்டுள்ளனர்.

இராமலீலாக்களும் கும்பமேளாக்களும், புது உற்சாகத்துடன் நடத்தப்படுவதுமட்டுமல்ல, துரைத்தனத்துப் பெரியவர்கள், இவைகளில் கலந்துகொண்டு, அந்த விழாக்களின் மதிப்பை அதிகப்படுத்திக் காட்டுகிறார்கள்-அந்தோ! பரிதாபம்! இதன்பலனைத் தமது மதிப்புக் குறைகிறது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

அறிவுக்குப் பொருந்தாத வீணாட்டங்களைப் பகுத்தறிவாளர் கண்டிப்பது கேட்டு, கூச்சமும் குளறலும் காட்டி வந்தவர்கள், இப்போது, விளக்கமளிக்கவும், வாதாடவும் துணிவுபெற்று வருகின்றனர்.

இராமலீலாவை இவர்களெல்லாம் கண்டிக்கின்றனரே! நேரு பண்டிதர் கலந்துகொண்டார், தெரியுமா? அவர் என்ன அறிவாளியல்லவா! அகில உலகம் புகழும் தலைவராயிற்றே! அவரே கலந்துகொண்டார் என்று பேச முடிகிறது.

மீண்டும் ஆரிய ஆதிக்கத்தைப் புகுத்த, இது பொன்னான வாய்ப்பு என்று கருதுபவர்கள், கவர்னர்களாகவும் 'கனம்'களாகவும், பத்திரிகை ஆசிரியர்களாகவும பார்லிமெண்ட் உறுப்பினர்களாகவும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களாகவும் பல்வேறு துறைகளிலே நிருவாகிகளாகவும், வீற்றிருக்கின்றனர். எனவே, இந்த முயற்சி மும்முரமாக நடைபெறுகிறது; அதிலே ஒரு கட்டம்தான், திருப்பதி. சமஸ்கிருத மொழி வளர்ச்சி மட்டும் பிரச்சினை என்பதல்ல— ஆரிய ஆதிக்கத்தை மீண்டும் புகுத்துவதற்கான திட்டத்தில், சமஸ்கிருத மொழிக்கு ஏற்றம் காண்பது ஒரு பகுதி.

பிராங்கயிஸ்ட்டின் என்றோர் படக்காட்சி உண்டு.

பிணத்துக்குப் புத்துயிர் ஊட்டுகிறான், விபரீத அறிவு படைத்த விஞ்ஞானி.

தன் திறமையால், பிணத்துக்கு உயிர் ஊட்டிவிடுகிறான். ஆனால் விளைவு என்ன? பிராங்கயிஸ்ட்டின் அதாவது, உயிர்பெற்ற பிணம், விஞ்ஞானி எதிர்பாராத பேராபத்துகளை விளைவித்து, நாசத்தை உண்டாக்குகிறது.

விஞ்ஞானியின் நோக்கமெல்லாம் சாவு என்பது அடியோடு அழிந்துபடுவது என்பதல்ல; செயலற்ற நிலைக்கு உடலைக் கொண்டு செல்வதே சாவு; இந்த நிலையை மாற்றி மீண்டும் உடலைச் செயல்பட வைக்கலாம், அதாவது உயிரூட்டலாம் என்பதை உலகினருக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதுதான்.

விஞ்ஞானியின் திறமையால் உயிர் பெற்றதும், பிராங்கயிஸ்டின், தன்னைப் பிணைத்திருந்த தளைகளை அறுத்துக்கொண்டு, 'பேய்க் கூச்சலுடன்' வெளியே கிளம்பிவிடுகிறது! அடக்க முடியவில்லை, எவராலும், யாருக்கும் கட்டுப்படவில்லை பிராங்கயிஸ்ட்டின் சென்ற இடமெங்கும், அழிவு, நாசம்! எதிர்ப்பட்டோர் கொல்லப்படுகின்றனர். அந்தக் கோர உருவம் கண்டு குலை நடுக்கம் ஏற்படுகிறது. குரூரமான நடவடிக்கைகளைக் கூசாமல் செய்கிறது பிராங்கயிஸ்ட்டின். போரிஸ் கார்லாப் எனும் நடிகர் பிராங்கயிஸ்டினாகத் தோன்றி, படத்தைப் பார்ப்பவர்கள் பீதி கொள்ளும்படியாக நடித்திருக்கிறார்.

**சமஸ்கிருதத்துக்குப் புத்துயிர் அளிக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சி வெற்றி பெற்றால் இந்த பிராங்கயிஸ்ட்டின் கதைபோலத்தானிருக்கும்.** சமஸ்கிருதம் உயிருடன், உயரிடம் பெற்றிருந்த நாட்களிலே, ஆரியம் தவிரப் பிற பண்பாடுகளை அழித்தொழித்ததுடன், ஆரியத்தின் ஆதிபத்யத்துக்கு அடிபணிய மறுத்தோரை ஈவு இரக்கமின்றி சித்திரவதை செய்திருக்கிறது. வட மொழிக்கு

## பிறப்பு

**கடலூர், 'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தோழர் இரா. பழனிசாமி அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்து, நலமே உளது.**

ஏற்றம் இருந்த நாட்களிலேதான், சமுதாயம், ஜாதிகள் எனும் முறை காரணமாகச் சின்னாபின்னப்படுத்தப்பட்டது. நாடாண்டவர்கள் அடிமைகளாயினர், ஆடு மாடு ஓட்டிவந்தவர்கள் அரசாட்சிகளை ஆட்டிப்படைக்கலாயினர், கற்பனை உருவங்கள் கல்லுருவம் பெற்று கண்ணன், காகுத்தன், கந்தன், கணபதி, என்றெல்லாம் காட்சி அளிக்கலாயின. கண்காணு 'லோகங்களை'ப் பற்றிய எண்ணமும் அங்கு சென்று இன்பம் நுகர்ந்திட இங்கு ஆரியரின் காலடி வீழ்தல் என்ற முறையும், வடமொழி மூலம் புகுத்தப்பட்டது. இதுவரை, வாய்மை தூய்மை, தோழமை அறிவுடைமை என்பவைகளையே ஏற்புடையனவாகக் கொண்டிருந்த மக்கள், அபிஷேகம் ஆராதனை, காணிக்கை விரதம் என்பன போன்றவைகளை மேற்கொள்ளவேண்டியவராயினர்.

**அலையை அடக்கினன்!**
**மலைமுகடு சென்றான்!**
**படையை வென்றான்!**
**பாடல் புனைந்தான்!!**

என்று பலப்பல கூறினர் தமிழர் தம்மினத்து அறிவாளர், ஆற்றலாளர் பற்றி. ஆரியத்தைப் புகுத்தினோர், கேலிப் புன்னகை புரிந்து,

**அலையை அடக்கினரா! சரி!**
**ஆசையை அடக்கினரோ?**

**படையை வென்றனரா? சரி!**
**பாசத்தைக் கொன்றனரோ?**

என்று பேசினர் — புரியவில்லையே என்று கேட்ட தமிழரிடம், வடமொழி ஏடுகளை நீட்டினர்—பிறகு புகுந்து இட்டும் இன்னலும், இழிநிலையும் விளைவித்தது ஆரிய நெறியும் முறைகளும். அவற்றினின்றும் விடுபட ஒரு பெரும் முயற்சி எடுக்கப்பட்டது—பேரறிவாளர்கள் பலர் பகுத்தறிவு பரப்பினர்—உலகத் தொடர்பு இங்கு கப்பிக்கொண்டிருந்த குருட்டறிவை பெருமளவுக்கு ஓட்டிற்று, ஆரியம் அடித்து விரட்டப்பட்டது, அறிவு ஆட்சி செய்யலாயிற்று!

அடிபட்ட வேங்கை, புதரில் பதுங்கிக்கொண்டு, தன் உடலிலிருந்து ஒழுகும் இரத்தத்தை நாவால் துடைத்தபடி, மீண்டும் எப்படிப் பாயலாம் என்று கிடக்கும் என்கிறார்கள். ஆரியம் இது போலச் சில காலம் கிடந்தது, இப்போது ஏற்பட்டுள்ள ஆட்சியைத் துணைகொண்டு, மீண்டும் ஆதிக்கம் செலுத்த முற்படலாம் என்று முயற்சிக்கிறது. இதற்கு, இப்போது, கவர்னராக உள்ள **முன்ஷி** போன்றவர்கள் நீண்டகாலமாகவே திட்டம் தீட்டியபடி இருந்தனர்—இப்போது, தக்க சமயம் வந்துவிட்டது என்று திருப்பதி மாநாடுகள் நடத்தப்படுகின்றன.

தாய்மொழி இங்கு தமிழ்; ஆந்திரத்தில் தெலுங்கு; என்று ஒவ்வோர் தாயகத்துக்கும் உள்ளன, அவைகளே அங்கு ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டும், எனவே அம்மொழிகளுக்கு உரிய ஏற்றம் அளித்தலே முறை என்பதை எவரும் மறுப்பதில்லை — திட்டவட்டமாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

உலகுடன் தொடர்பு கொண்டிருக்கவும், உயரிய சிந்தனையாளர், விஞ்ஞான வித்தகர்கள் ஆகியோரின் எண்ணங்களை அறிந்து பயன் பெறவும் ஆங்கில மொழி அவசியமாக இருத்தல் வேண்டும் என்பதைக் காங்கிரஸ் பெருந்தலைவர்களே இப்போது அழுத்தந்திருத்தமாகக் கூறத் தலைப்பட்டுள்ளனர்; ஆங்கில மொழி அறிவு, பழுதுபட்டிருக்கிறது என்பது பற்றி நேரு பண்டிதரே வருத்தப்படுகிறார்; எனவே ஆங்கில மொழியின் ஆக்கத்திலும் நாட்டவர் ஊக்கம் காட்ட வேண்டியவர்களாகின்றனர்.

ஆதிக்க மொழியாக 'இந்தி' கோலம் காட்டுகிறது, கொக்கரிக்கிறது!

மூன்று மொழிகளுக்கும் காரணம் காட்டப்படுகின்றன.

இனி இந்த மூன்று மொழிகள் இருப்பினும், சமஸ்கிருதம் இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்படுவானேன்? காரணம் என்ன காட்டப்படுகிறது? சமஸ்கிருதம் இருத்தல் வேண்டும் என்பது மட்டுமல்ல வலியுறுத்தப்படுகிறது! சமஸ்கிருதம், ஏற்றம் பெறவேண்டுமாம். ஏன்?

பண்டைப் பெருமையை உணரவும், மீண்டும் அதனைப் புதுப்பிக்கவும் சமஸ்கிருதம் தேவையாம்.

பண்டைப் பெருமையைத் தமிழர் தமிழ்மொழி மூலம் அறிந்துகொள்ள முடியாது—சமஸ்கிருதம் தேவையாம், துணிந்து பேசுகிறார்கள். துரைத்தனத்துப் பெரியவர்கள் துணை நிற்பதால் இந்தத் துடுக்குத்தனம் பேச முடிகிறது.


சிறந்த முறையில்!
அரிய கருத்தோவியங்களுடன்!!
**திராவிட நாடு**
**பொங்கல் மலர்**
தயாராகிறது.


தமிழரின் மொழி, ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பு முளைத்ததல்ல.

வடமொழியினர், விழியில் நீர் சோர, வரண்ட நிலத்தில் வாழவகையற்று, பச்சை தேடி அலைந்த நாட்களிலேயே, தமிழ் உயர்தனிச் செம்மொழி என்ற நிலை பெற்றிருந்தது.

தொல்காப்பியம் எனும் நூல், பெயர் மூலமே, தமிழின் தொன்மையை விளக்கிவிடுதல் காண்கிறோம்.

தமிழரின் பண்டைப் பெருமையைக் கண்டறிய தமிழ் ஏடுகள் பலப்பல உள. அவற்றினைப் படித்து இன்புறும் அளவுக்கும் அறிவாற்றலற்ற நிலைக்குத் தமிழர் துரத்தப்பட்டுத் துயர்ப்படுகின்றனர்.

தமிழரின் பண்டைப் பெருமையை அறிந்துகொள்ள, தமிழர் தாழ்வுறாமல் வாழ்ந்த நாட்களில், தன்னரசு செலுத்திய நாட்களிலே, தமிழ்ப் பெரும் புலவர்கள் தந்த ஏடுகள் போதாவாம், ஆரிய ஏடுகள் தேவையாம்! அதற்காக வடமொழியாம்! என்னே நெஞ்சழுத்தம்.

தமிழரை இழிவுபடுத்த வேறென்ன கூறவேண்டும்?

பண்டை மொழி ஒன்றினை மீண்டும் ஒளிவிடச் செய்ய எடுத்துக்கொள்ளப்படும் முயற்சி என்ற சாக்குக் கூறிக்கொண்டு, கயமையும் கபடமும் நெளியும் உள்ளம் படைத்த ஒருசிலர், தமிழ் நெறியையும் தமிழருக்கு இதுபோதுகிடைத்

துள்ள தெளிவையும் பாழ்படுத்த முனைகின்றனர். அவர்கள் ஏழுமலை ஏறி இறங்கினாலும், வெற்றி பெறப் போவதில்லை, எனினும், வஞ்சகர் நெஞ்சில் இன்றும் எத்தகைய நஞ்சு குடிகொண்டிருக்கிறது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

திராவிட மொழிகள் தவிர, இந்திய துணைக்கண்டத்திலுள்ள பிற மொழிகளில் பெரும்பாலானவை ஆரிய மொழிகள் என்கின்றனர். வடமொழி தனித்தியங்காது போயினும் இம் மொழிகளில் உறைகிறது என்று கூறி உள்ளம் பூரிக்கிறார்கள்.

தமிழ், தனிமொழி எனினும், ஆரிய மொழியினரின் நெறியினை எடுத்துப் புகட்டிப் புகுத்தும் தன்மையில், தமிழில் புராண இதிகாசாதிகள் உள்ளன என்று கூறி நொந்த உள்ளத்தைச் சாந்தி பெறச் செய்துகொள்கிறார்கள்.

எனினும், உள்ளூர ஒரு வேதனை இருக்கிறது, அவர்கட்கு; வடமொழி வழக்கற்றுப் போயிற்றே, அதனால் அல்லவா வடமொழியாளரின் கரம் வலுவிழந்து போயிற்று, வர்ணாஸ்ரமத்துக்குக் கட்டுப்பட்டுக் கிடந்த மக்கள் இன்று, சமத்துவம் பேசுவதும், யாகமாம் யோகமாம் இவைகள் எற்றுக்கு என்று ஏளனம் செய்வதும், பூதேவனா! இன்னமுமா இந்தப் புரட்டு? என்று கண்டிப்பதுமாக உள்ளனர்; மீண்டும் வடமொழிக்கு அரியாசனம் கிடைத்துவிட்டால், பழையபடி ஆரியத்துக்கு மக்கள் அடிபணிவரே, என்று எண்ணுகின்றனர். அந்த நச்சு நினைப்புடனேயே, சமஸ்கிருத மாநாடு நடத்துகின்றனர்!

சோமநாதபுரம், காசி, நாகபுரி ஆகிய இடங்களிலே இது போன்ற மாநாடுகள் முன்னம் நடத்தினர், இப்போது திருப்பதி வந்துள்ளனர்—தமிழர்களுக்குக் காமராஜர் போன்ற தலைவர்கள் நீடித்தால், திருநெல்வேலியிலும் நடத்துவர்.

இம் மாநாடு, இலட்சக் கணக்கான மக்கள் கொண்டதல்ல, ஆனால் கோடிக் கணக்கான மக்களை ஆண்டுவரும் வாய்ப்புப் பெற்ற குடி அரசுத் தலைவர் பாபு ராஜேந்திரபிரசாத், கவர்னர்களாக உள்ள மேதாப், முன்ஷி, பதஞ்சலி சாஸ்திரி போன்ற உயர்நீதி மன்றத்தவர், கோபாலரெட்டி சந்திர மௌலி போன்ற அமைச்சர்கள், ஆகியோர் கலந்துகொண்ட மாநாடாகும்.

துரைத்தனத்துப் பெரிய மனிதர்கள் கலந்துகொண்டதால், எல்லா ஏடுகளிலும், இம்மாநாடுபற்றிய 'செய்தி' பக்கம் பக்கமாக வெளிவந்துள்ளது. பத்திரிகைச் செய்தியைப் பார்ப்போருக்கு மிகப் பிரம்மாண்டமான மாநாடு நடைபெற்றதுபோலக் கூடத் தோன்றும். **1300** பிரதிநிதிகள் வந்தனர் என்று மாநாடு அறிக்கையே கூறுகிறது!!

அகில இந்திய மாநாடு! குடி அரசுத் தலைவர் கொலுவீற்றிருக்கிறார்—இரண்டு கவர்னர்கள் 'கர்ஜனை' செய்கிறார்கள்-ஜட்ஜுகள் வாதாடுகிறார்கள் — அமைச்சர்கள் உபசாரம் பரிமாறுகிறார்கள் — பிரதிநிதிகளோ 1300!

கவர்னர் முன்ஷி, பெருமிதத்துடன் குடி அரசுத் தலைவர் என்ன கவர்னர்களென்ன, மந்திரிகளென்ன, ஜட்ஜுகளென்ன, பேராசிரியர்களென்ன—இவ்வளவு செல்வாக்கு நிரம்பியவர்கள் கூடிய மாநாடு, மகத்தான காரியங்களைச் சாதிக்கத்தான் போகிறது என்று கூறி மார்தட்டுகிறார்.

பிணத்துக்கு, இவ்வளவு பிரமாதமான உபசாரம், உற்சவம்!

**கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் சமஸ்கிருதம் கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டும்.**

**இதனை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.**

**சமஸ்கிருத பாடசாலைகளுக்கு சர்க்கார் அதிகமான அளவு 'மான்யம்' தரவேண்டும்.**

**சமஸ்கிருத பண்டிதர்களுக்குச் சம்பளம் அதிகம் தரவேண்டும்.**

**சமஸ்கிருத ஏடுகளை வெளியிட வேண்டும்.**

**வால்மீகி, வியாசர், காளிதாஸர் ஆகியோருடைய விழாக்களை, தேசிய விழாக்களாகக் கொண்டாட வேண்டும்.**

இவை மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள்.

அடுத்த மாநாட்டிலே, 'மனு'வின் விழாநாள் சேர்த்துக்கொள்ளப் படக்கூடும்!

அதற்கு அடுத்த மாநாட்டில் சமஸ்கிருத மொழிக்கு உயர்வளிக்க வேண்டுமானால், அம்மொழியில் உள்ள சாஸ்திர விதிகளின் படி ஆட்சி நடத்தப்பட வேண்டும், என்று தீர்மானமும், அதற்கான திட்டமும் நிறைவேற்றப்படலாம். இந்தியா ஒன்று, ஆரியர் திராவிடர் என்று பேசுவது அபத்தம், வடநாடாவது தென்னாடாவது, பழைமையைக் கண்டிக்கலாமா, பகுத்தறிவாவது மண்ணாவது, என்று பேசும் 'மேதாவிகள்' ஆட்சிப் பொறுப்பிலும் ஆட்சியை ஆட்டிப்படைக்கும் நிலையிலும் நீடித்து இருப்பார்களானால், மனுதர்ம சாஸ்திரப்படி, ஆரியத்தைக் கண்டித்துப்பேசுவோனின் நாதுண்டிக்கப்படவேண்டும், கட்டைவிரல் வெட்டப்படவேண்டும், வேதத்தைப் படிக்கும் சூத்திரனுடைய வாயில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும், என்பனபோன்ற 'உத்தம'மான முறைப்படி ஊராட்சி நடைபெறும்!

இவ்விதமெல்லாம், நடைபெறுமா—எத்தனை மாநாடு போட்டாலும்—என்று பேசும் காமராஜர்கள் இவ்விதம் 'மாநாடுகள்' நடத்தியதால் இப்போதே, அவர்களுக்குக் கிடைத்துள்ள சலுகைகளை அறியார்கள்.

---


**திராவிட மாணவ முன்னேற்றக் கழக**

## 2-வது மாநில மாநாடு

**19-11-55-சனி காலை 8-30 மணிக்கு**

**சென்னை**

**கோகலே மண்டபத்தில்**

நடைபெறும்

★

தலைவர்:

**கே. ஏ. மதியழகன்**

திறப்பாளர்:

**இரா. நெடுஞ்செழியன்**

பேசுவோர்:

**சி. என். அண்ணாதுரை**

**என் வி. நடராசன்**

ஆகியோரும், மற்றும் திராவிட மாணவ மணிகளும்.

இசைச் செல்வி ஜி. கஸ்தூரியின் இன்னிசையுடன் துவங்கும்.

★

**நன்கொடை: ரூ. 1, அணா 8**

**டி. கே. பொன்னுவேலு**

வரவேற்புக் குழுத் தலைவர்

**உ. பில்லப்பன், எல். லெனின், து. தீ. தயாளன்.**

செயலாளர்கள்

(1) பல்கலைக் கழக சமஸ்கிருதப் பேராசிரியர்களின் மாநாடு நடத்தி, சமஸ்கிருதக் கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றைச் செம்மையாக நடத்துவதற்கான வழிவகை கண்டறியும் முயற்சியில், மத்திய சர்க்கார் ஈடுபட்டது.

(2) அகில இந்திய ரேடியோவின் எல்லா நிலையங்களிலும் சமஸ்கிருதத்தில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யும் திட்டம் வகுக்கப்பட்டது.

(3) ஆந்திரா சர்க்கார், பி. ஏ. வகுப்பில் சமஸ்கிருத மொழிப் படிப்பை, (சரிதம், கணிதம்போல) முக்கிய பாடமாக்கியிருக்கிறது.

(4) சமஸ்கிருதப் பரீட்சையில் தேறிய, தெலுங்கு பண்டிதர்களின் சம்பளத்தை மூன்று மடங்கு ஆந்திர சர்க்கார் உயர்த்தியிருக்கிறது.

(5) மத்திய பாரதத்தில் சர்க்கார் 'சமஸ்கிருத மஹாவித்யாலயம்' ஏற்படுத்தி, அதனைப் பல்கலைக் கழகத்தில் இணைத்திருக்கிறது.

(6) பஞ்சாப் சர்க்கார், குருக்ஷேத்திரத்தில், ஒரு சமஸ்கிருத பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறது.

(7) சமஸ்கிருத பண்டிதர்களின் சம்பளத்தை பஞ்சாப் சர்க்கார் உயர்த்தி இருக்கிறது.

(8) பஞ்சாபில், இந்தி, பஞ்சாபி பண்டிதர்கள், சமஸ்கிருதப் பரீட்சையில் கட்டாயமாகத் தேறியாக வேண்டும் என்று 'விதி' நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

(9) சமஸ்கிருத பாடசாலைகளுக்கு, பஞ்சாப் சர்க்கார் தாராளமாக மான்யம் தருகிறது.

(10) உத்திர பிரதேச சர்க்கார் சமஸ்கிருத பல்கலைக் கழகத் திட்டம் தயாரித்திருக்கிறது.

(11) லக்னோ பல்கலைக் கழகம் சமஸ்கிருதத்தை (பி. ஏ.) பட்டப் படிப்புக்குக் கட்டாய பாடமாக்கி இருக்கிறது.

(12) திருவாங்கூர் தேவோசம் போர்டு உணவு விடுதிகள் நடத்தியும், உதவித்தொகை கொடுத்தும் சமஸ்கிருதம் பயிலும் மாணவர்களுக்கு ஆதரவளித்துவருகிறது.

ஏன், இவ்விதமான மாநாடுகளைப் பெரிதுபடுத்துகிறீர்கள், என்று கேட்கும் அறிவாளர்களின் பார்வைக்கு இந்தப் பட்டியல்!

1300 தான் பிரதிநிதிகள்! எனினும் குடிஅரசுத் தலைவரும் கவர்னர்களும் கூடிகிறார்கள், பலன் ஏற்படாமலிருக்குமா! 'கஜானா'வைத் திறந்து தாராளமாகச் செலவிடுகிறார்கள்! இவ்வளவும் உலகவழக்கு அழிந்து ஒழிந்த ஆரியத்துக்கு! பாபு ராஜேந்திரபிரசாத்கூட சமஸ்கிருதம் பழையபடி அரியாசனம் ஏறும் என்று எண்ணுகிறீர்கள் என்று எச்சரித்துமிருக்கிறார்!!

ஏழுமலை ஏறுகிறார்கள், என்றால், இலாபம்இருக்கிறது அவர்களுக்கு. 'நம்மவர்கள்' ஏறி இளித்தவாயர்களாகக் கீழே இறங்குகிறார்களே, அதுபோலவா, அவர்கள்? காரியத்தோடு கூத்து நடக்கிறது!

★

# ★ இதுதானோ அது? ★

சோவியத் நாட்டிலே சோபிதமான வரவேற்பு கிடைத்தது, நேரு பண்டிதருக்கு.

புல்கானின்மீது அன்பு சொரிய இந்திய சர்க்கார் முன்வந்துள்ளனர்.

மக்களின் விருப்பமும் இந்திய சர்க்காரின் விருப்பமும் ஒரே விதமாக அமைந்திருப்பது, இந்த எட்டாண்டுக் காலத்தில் இது ஒன்றுதான்!

புல்கானினுக்குப் புகழுரை வழங்கியும், பரிசுகள் தந்தும், வரவேற்புகளை ஏற்பாடு செய்வது போற்றத்தக்கது.

எனினும், மக்களின் அமைப்புகள் அனைத்தினையும் உள்ளடக்கியதாக ஓர் 'குழு' அமைத்திருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

சர்க்காரின் தலைவருக்குச் சர்க்காரின் தலைவர்கள் தரும் ராஜோபசாரமாகமட்டுமே இது அமையவேண்டும் என்று கருதினர்போலும்!

ஏதோ, இந்தமட்டுக்காவது 'அமெரிக்க டாலர் தேவதை' சீறுமே சோகிக்குமே என்று அஞ்சாமல் உலகில் புதுமுறை வகுத்துள்ள ஆட்சித் தலைவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிப்பது கண்டு, மட்டற்ற மகிழ்ச்சிகொள்கிறோம்.

எனினும், வேறோர் செய்தி கண்டு, இவ்வளவும் வெளிவேஷமா என்று எண்ணிக் கவலைகொள்ளவேண்டி வருகிறது.

ஆஸ்திரேலிய அமைச்சர் குழு, ஒரு 'திருத்தொண்டில்' ஈடுபடுகிறதாம்.

மலிவான விலையில் புத்தகங்களை விற்பதனால்மட்டுமே இங்கு 'பொதுஉடைமை' பரவுகிறதாம்!

இதனைத் தடுத்திடவே ஆஸ்திரேலிய அமைச்சர் குழு 'திட்டம்' தீட்டியிருக்கிறது.

கம்யூனிச ஏடுகளைவிட, மிக மலிவான விலையில், கம்யூனிச எதிர்ப்பு ஏடுகளை வெளியிட்டு, உலகெங்கும் பரப்பி, அதன்மூலம், 'பொதுஉடைமை'க்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கைச் சிதைக்கபோகிறதாம், ஆஸ்திரேலிய அமைச்சர் குழு.

கேசி எனும் ஆஸ்திரேலிய அமைச்சர், இதைக் கூறுகிறார்; கூறுவதுடன், இந்தப் 'புனித' கைங்கரியத்தில், தம்முடன் ஒத்துழைப்பதாக, இந்திய சர்க்கார் இசைந்திருக்கிறது என்றும் தெரிவிக்கிறார்.

வரவேற்புகள் ஒருபுறம், இந்த வஞ்சனை மற்றோர்புறம்!

சோவியத் தலைவர்கள்மீது அன்பு சொரிவது ஒருபுறம், சோவியத்தின்மீதும் தலைவர்கள்மீதும் 'துவேஷம்' கக்குவது மற்றோர்புறம்!

ஏன் இந்தப் போக்கு என்பது புரியவில்லை!

இதுதான், அந்தப் பிரபலமாகியுள்ள, 'கோ-எக்சிஸ்டென்சு' எனப்படும், ஒத்து வாழ்தல்போலும்!!

# இருளில் ஒளி

சி. என். அண்ணாத்துரை.

**அவனவன்** வினைப்படி அவனவனுக்கு வாழ்க்கை அமைகிறது.

ஆண்டவன் படி அளக்கிறான்-அது தான் கிடைக்கும்.

பொறுத்துக்கொள்ள வேண்டும் — கர்த்தரிடம் முறையிட்டுக்கொள்ள வேண்டும்.

பாபத்துக்குத் தக்கவிதமாக வாழ்க்கை அமைகிறது — பரிகாரத்துக்கு வழியும் இருக்கிறது—பக்கத்திலுள்ள பாதிரியைக் கேட்டுப் பார்.

இதுபோல மதவாதிகள், ஏழை உலகின் பிரச்னைகுறித்துப் பேசிவந்தனர்.

ஏழ்மையைக் குறித்து வருத்தப்படுவதேகூடத் தவறு—பாபம் — என்று பேசினர், சிலர்.

செல்வம் படைத்தவன் இன்பம் பெறுகிறான் என்று எண்ணாதீர் — அவன்படும் அல்லல் கொஞ்சமல்ல— என்றும் பேசுபவர் இருந்தனர்.

ஊசியின் துவாரத்தில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையும்,பணக்காரன் பரமண்டலம் செல்லமுடியாது—தெரியுமா திருவாசகம் என்று கூறினர்.

ஏழ்மை கண்டு வருந்துவது, இருப்பவனைக் கண்டு பொறாமைப்படுவது, செல்வம் தேடவேண்டும் என்று பேராசைகொள்வது, இவை ஆகாது என்று அறிவுரை கூறிய உபதேசியார்கள் இருந்தனர்.

பணம் தேடுபவன், பராரியைக் கெடுக்கிறான், இது அக்ரமம்—என்று கண்டிக்க அவர்கள் முன்வருவதில்லை.

ராபர்ட் ஓவன், அன்பு மார்க்கம்பற்றி அரிய உபதேசமாற்றுபவர்கள் இந்த அக்ரமத்தைக் கண்டிக்காமலிருப்பதுகண்டு கடும் கோபம்கொண்டார். அவர்களல்லவா, அநீதியை அழிக்கக் கிளம்பவேண்டும், அவர்களல்லவா, தொழிலதிபர்கள் ஏழைகளைக் கசக்கிப் பிழிவதைக் கண்டிக்கவேண்டும் — நியூலானார்க்குகளை நிறுவவேண்டியவர்கள் அவர்களல்லவா! மார்க்கம் என்பது சமூகத்திலே அன்பும் அறமும் தழைத்திடவைக்கும் சாதனமாக அல்லவா இருக்கவேண்டும். பூஜாமாடங்கள் அமைத்துவிட்டால் போதுமா? ஆண்டவன் பொன்னடி போற்றுக என்று பாடிவிட்டால் போதுமா? ஏழையின் கண்ணீரைத் துடைக்கவேண்டாமா? எளியோரின் வியர்வையைக் குறைக்கவேண்டாமா? ஏன் இதனை இவர்கள் செய்வதில்லை என்று ஓவன் எண்ணினார், கேட்டார், கண்டிக்கலானார்.

ஒருபுறம் செல்வவான்கள் கிளம்பிச் சீறினர், மற்றோர்புறம் மதவாதிகள் கூடிச் சபித்தனர். மக்களுக்கு இதம் செய்யும் பணியினை, ஏழையை வாழவைக்கும் ஏற்பாட்டை, சமூகத்தில் அக்ரமத்தைக்களைந்தெறிந்து நீதியை மலரச் செய்யும்முறையை, நான் புகுத்துகிறேன், என்மீது வெகுண்டெழுகிறார்கள் வேதமோதிகள், என்னே இவர்தம் போக்கு என்று வருந்தினார், ஓவன் — சிந்தித்தார், அவர்கள் மனப்போக்குப்பற்றி. மற்றோர் உண்மை அவருக்குப் புலப்பட்டது—எந்த மார்க்கமும் ஏழையின் தாழ்வு துலங்கும் வழிகாட்டுவதல்ல; இருப்பவனுக்குத் துணையாக இருந்துகொண்டு, இல்லாதவனைப் பொல்லாதவன் என்று ஏசி அடக்கிக்கொண்டிருப்பதுதான் என்ற முடிவுக்கு வந்தார்—அதனை எடுத்துக் கூறவும் முனைந்தார். எதிர்ப்பு மேலும் வலுத்தது.

ஓவன், கனவு காண்பவன்மட்டுமல்ல, மதநிந்தகன் என்றனர்.

மக்களிடம் தன் புதுக் கருத்துகளை எடுத்துக் கூறினார் ஓவன், மிக்க மன எழுச்சியுடன்—மக்கள் விழிப்படைந்தனர்.

ஏன் பிறருக்கு உழைத்து ஓட்டாண்டி ஆகிறீர்கள்? உங்களுக்குள் கூட்டுறவு வளரட்டும் — கொடுமையாளர் தொலைவர்.

இந்தப் புதுக்கருத்துகளைப் பரப்பும் பள்ளிகளை நிறுவினார் — பல ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது —அவர்கள்மூலம் நாடெங்கும் இந்த நல்லறிவுப் பிரசாரம் நடைபெற்றது.

இரண்டாயிரம் மூவாயிரம் தொழிலாளர்கள், முகாம் அமைத்துக் கொள்ளவேண்டும்- அங்குள்ளோருக்குத் தேவையான பண்டங்களை அவர்களே உற்பத்தி செய்யவேண்டும்— எவரெவருக்கு எந்தெந்தத் தொழில் தெரியுமோ அதில் ஈடுபடவேண்டும்- பண்டமாற்று நடத்திக்கொண்டு, மற்றொருவர் கையை எதிர்பாராமல் வாழவேண்டும்-கூட்டுறவு தழைக்கவேண்டும். இவ்விதமான முகாம்கள், நாடெங்கும் அமைந்துவிட்டால், தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக்கொண்டு இலாபவேட்டை ஆடுபவர்களின் ஆதிக்கத்துக்கு இடமே இருக்காது. உற்பத்தியின் நோக்கம் உபயோகத்துக்காக; இலாபத்துக்கு அல்ல! இந்த முகாம்களில், குழந்தைகளைக் கொடுமை செய்யும் முதலாளிக்கு இடமில்லை. பொருளைக் குவித்து வைத்து, வியாபாரம் நடத்தி இலாபம் திரட்டும் வணிகனுக்கு வேலை இல்லை. இங்கு ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பர், எல்லோரும் கூடிப் பணிபுரிவர்; பொதுவில் கிடைக்கும் நலன் அனைவருக்கும் கிடைக்கும்—இது ஓவன் சித்தரித்துக் காட்டிய புது உலகம்.

ராபர்ட் ஓவன் கொண்டிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையின் காரணமாக, அவருடைய பேச்சிலே ஒரு ஆவேசம் தென்பட்டது — ஏழை மக்கள் உள்ளத்திலே ஒரு நம்பிக்கைபுகுந்தது.

ஆதிக்கக்காரன் அழிந்துபடப்போகி

ருன். புதுவாழ்வு வந்துகொண்டே இருக்கிறது! பொற்காலம் பிறக்கிறது! சிறிது ஆர்வத்தை அதிகப்படுத்துங்கள், வெற்றி உங்களை நாடி வருகிறது என்று பேசுவார்; ஏழை மக்கள் பூரித்துப் போவர்.

இன்னும் ஒரு ஆறு மாதங்களுக்குள் புது உலகு பூத்திடப் போகிறது என்ற நம்பிக்கை கொண்டு, அதனை வரவேற்க மக்களைத் திரட்டுவதுதான் தன்வேலை என்று எண்ணிக்கொண்டு பணியாற்றுவது போலிருந்தது, ஓவன் நடாத்திய பிரசாரம்.

நெப்போலியன், ஐரோப்பாவில் மூட்டிய பெரு நெருப்பு அணைக்கப்பட்டுப் போர் முடிந்தது; இங்கிலாந்திலே பொருளாதார நெருக்கடி அதிகரித்தது.

நாட்டுக்கே பேராபத்து, இன்றிரவோ, நாளைக் காலையோ, நெப்போலியன் இங்கிலாந்தைப் பிடித்துவிடப் போகிறான், என்ற பீதி ஒழிந்தது, ஆனால் போரின் காரணமாக ஏற்பட்டிருந்த தொழிற் பெருக்கம் சரிந்தது, மந்தம் ஏற்பட்டது, வேலையில்லாத் திண்டாட்டம் தலைதூக்கிற்று; சாரைசாரையாக மக்கள் வேலை இழந்து நின்று தவித்தனர்—பஞ்சம்—பட்டினி. சர்க்கார், பஞ்சகாலத்துக்குச் செய்யவேண்டிய முறைப்படி, அரை வயிற்றுக் கஞ்சியாவது தரவேண்டும்-அந்தச் செலவு தாங்கக்கூடியதுதானு என்று, சர்க்கார் எண்ணித் திணறிக்கொண்டிருந்தது. ராபர்ட் ஓவன், இடித்துக் கூறினர், என் திட்டப்படி, தொழிலாளர் முகாம்களை, கிராமங்களை, நியூலானர்க்குகளைச் சர்க்கார் துவக்க வேண்டும், பிணிபோக்கும் மாமருந்து அதுதான்- வேலையில்லாதவர்களுக்கு பஞ்சப் படி கொடுத்து வருவது, பிரச்சினையைத் தீர்க்காது-சிக்கலை வளர்க்கும், கூட்டுறவுக் கிராமங்களை அமைத்தால், மக்கள் தங்கள் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்துகொள்ளும் நிலை வளரும், என்று வலியுறுத்திக் கூறினர். துரைத்தனம், இந்தத் திட்டத்தை ஏற்கவில்லை! இது கனவு காணும் ஓவன் திட்டம்—நாடு ஆளும் நமக்கு இது ஏற்றதாகாது என்று இருந்துவிட்டனர்.

பாதை கண்ணுக்குத் தெளிவாகத் தெரிந்தும், படுகுழி நோக்கி விரைந்து செல்கிருர்களே, என்று எண்ணி ஓவன் மனம் பதறினர். பழங்காலக் கருத்துகளும், நெறியற்ற முறைகளும் ஊறிப்போன இங்கு, எனது கருத்து வளராது, புத்துலகமாகத் திகழும் அமெரிக்கா சென்று, அங்கு என் வாழ்வு முகாம்களை அமைத்து வெற்றி காட்டுவேன், என்று சூளுரைத்து விட்டு, ராபர்ட் ஓவன், அமெரிக்கா சென்ருர்.

1924ம் ஆண்டு, அமெரிக்கா சென்ற ஓவன் அடுத்த ஆண்டிலே அங்கு தன் திட்டப்படி, கூட்டுறவுச் சமூகம் காண, ஒரு சமரசபுரி அமைத்தான், பணம் அவ்வளவும் ஓவனுடையது; நம்பிக்கை மிகுதியுடன் பணியாற்றினர். ஆனல், பலன் இல்லை! புத்துலகம் என்று பெயர் கொண்டிருந்ததே தவிர, அமெரிக்காதொழில்துறையிலே புதுக் கருத்துக்களை ஏற்கவில்லை. புதுக் கருத்து மலரும் பூந்தோட்டமாகும் அமெரிக்கா என்றெண்ணி வந்த ஓவன், பெரும் ஏமாற்றமடைந்தார். அமெரிக்காவில், வகை வகையான தொழில்களை நடத்தி, செல்வத்தைக் குவித்திடும் காரியத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தவர்கள், ராபர்ட் ஓவன் திட்டம் வெற்றிபெற விடவில்லை. கூட்டுறவுச் சமூக முறை, வெற்றிபெற வேண்டுமானல், படிப்படியாக, நாடு எங்கும் உள்ள தொழில்கள் யாவும், அந்த முறைக்கு வந்து சேர வேண்டும். இலாப வேட்டைக்காரர்கள் ஒரு புறம் தொழில் நடத்திக் கொண்டிருக்கும் இடத்தில், ஒரே ஒரு சமரசபுரி இருக்குமானல் கடுமையான போட்டியினல், சமரசபுரியின் கூட்டுறவுத் தொழில் நசுக்கப்பட்டுவிடும். மாடப் புருக்களுக்கிடையிலே ஒரு வல்லூறு புகுந்தால், புருக்கள் என்ன ஆகும்! இங்கோ, ஒரு மாடப்புரு, பல வல்லூறுகள் வட்டமிடுகின்றன! ஓவன் பெருந் தோல்வியுற்ருர்-மனம் உடையுமளவுக்குத் தோல்வி. கைப் பொருள் அனைத்தும் இழந்தார்! அமெரிக்காவிலே இருந்து பயனில்லை என்று அறிந்துகொண்டார், திரும்பவும், இங்கிலாந்து வந்து சேர்ந்தார்.

இங்கிலாந்திலே தொழில் அதிபர்களுக்கெல்லாம், திருவிழாக் கொண்டாட்டம். நாம் நடாத்தி வரும் தொழில் முறையைக் கண்டித்து நமக்கெல்லாம் 'அறிவுரை' கூறினன்; அமெரிக்கா சென்ருன், தோல்வி துரத்திற்று, கைப்பொருள் இழந்து திரும்புகிருன், இனி வாயடைத்துக் கிடப்பான், என்று எண்ணி மகிழ்ந்தனர்.

எவ்வளவு கண்டித்தான், என்னென்ன பேசினன், மனிதகுல முன்னேற்றத்துக்கு மதம் முட்டுக் கட்டை என்றல்லவா கூறினன், ஆண்டவன் சரியான பாடம் கற்பித்தார், இருந்த பணத்தை இழந்துவிட்டுத் திரும்புகிருன், மூலையில் கிடப்பான் என்று எண்ணினர் மதவாதிகள்.

ஓவனுக்குப் பெருந்துயரம்தான்—எனினும் அவனுக்குத் தனது கொள்கையிலோ, திட்டத்திலோ துளியும், அவநம்பிக்கை ஏற்படவில்லை. மனித குலம் உய்ய, இதனினும் சிறந்த மார்க்கம் கிடையாது என்ற கருத்து, கைப்பொருளை இழந்ததால், கருகிப் போகவில்லை.

ஐந்தாண்டுகள் அரும்பாடுபட்டுத் தோற்ருேம்—ஆனல் காரணம் தெளிவாகத் தெரிகிறது, கொள்கையில் குறை ஏதுமில்லை, சமரசபுரியிலே பணிபுரிய வந்தவர்களுக்கு, கொள்கையின்படி நடந்திடும் மாண்பு பிறக்கவில்லை, ஒருவருக்கொருவர் பகைத்துக் கொண்டனர், தனித்தனி நோக்கம் தலைதூக்கிற்று, சுயநலம் புகுந்தது, அதனுல், என் இலட்சியபுரிக்குக் கேடு சூழ்ந்தது — கொள்கையில் குறை ஏதும் இல்லை, என்று கூறிக்கொண்டார் ஓவன்.

ஓவன் அமெரிக்காவில் இருந்த போது, இங்கிலாந்து நாட்டுத் தொழிலாளர் உலகம், சோம்பிக்கிடக்கவில்லை. ஓவன் தந்த ஒளி, அவர்களுக்கு உற்சாகமூட்டிற்று. தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ள இயலும் என்ற நம்பிக்கை வளர்ந்தது; கழகம் பல கண்டனர்; ஏறத்தாழ எல்லாத் தொழில்களிலும், தொழிலாளர்களுக்குக் கழகங்கள் ஏற்பட்டன. தொழிலாளர் இயக்கம் வீறுகொண்டு எழுந்தது. அதிலே பணியாற்றியவர்களிலே, பலருக்கும், ராபர்ட் ஓவனுடைய கொள்கையிலே பற்று; அவருடைய 'தொண்டு'பற்றி பெரு மதிப்பு. ஓவன் எண்ணுவதுபோல, புதுச் சமூக அமைப்பு, எளிதானதல்ல. அவர், தன் நெஞ்சம் போல் எல்லாருக்கும் இருக்கும் என்று எண்ணுகிருர், அது தவறு, ஆனல் அவருடைய இலட்சியம் அப்பழுக்கற்றது, நோக்கம் தூய்மையானது, தொண்டு மகத்தானது, என்று புகழ்ந்தனர். ஓவன், அடுத்த ஆறு திங்களுக்குள் புது வாழ்வு கிடைத்துவிடும் என்று உறுதியாக நம்பும் போக்கிலே பேசிவந்தார், நாட்டுநடப்புகளைக் கூர்ந்துகவனித்து வந்த தொழிலாளரியக்கத்தவர், எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் பணியாற்றினல், ஓவன் கண்ட கனவிலே, ஒரு பகுதியை அடுத்த தலைமுறைக்குள் அடையலாம், என்று எண்ணிப் பாடுபட்டுவந்தனர். எங்கெங்கு தொழிலாளர்களின் கழகங்கள் தழைத்தனவோ, அங்கெல்லாம், கூட்டுறவுப் பண்டகச் சாலைகள் அமைக்கப்பட்டன—ஓவனுக்குக் காட்டப்படும் மரியாதைக்கு அவை, அறிகுறிகளாயின.

புதுச்சமூக அமைப்புக்காக மட்டுமல்லாமல், தொழிலாளர்களுக்கு இருந்து வந்த பல தொல்லைகளை நீக்க, சட்டம் இயற்றும்படி, ஓவன், சர்க்காரிடம்

"நம்மிடம் இல்லாமலிருந்தால் கூட, இன்னொருவருக்கு வழங்கக் கூடிய பொருள், ஆனந்தம் தான்."

டைஜஸ்ட்

போராடிக் கொண்டிருந்தார். அது பலன் தராமற் போகவில்லை. தொழிலாளர்கள், தங்களுக்கெனக் கழகம் அமைத்துக்கொள்வதை, மூர்க்கத்தனமாக எதிர்த்து வந்த துரைத்தனத்தார், 1824-ல், அந்தத்தடையை நீக்கிவிட்டனர்; தொழிலாளர் கழகங்கள் எங்கும் தோன்றலாயின.

ஆனால், இதற்காகத் தொழிலாளர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்சமல்ல; இந்த நிலை அடைவதற்குள் அவர்கள்மீது வீசப்பட்ட அடக்கு முறை சாதாரணமானதல்ல.

தொழிலாளர்களை அடக்கி ஆள வேண்டுமென்று, தொழிலதிபர்கள் ஆட்சிமன்றத்துக்கு அடிக்கடி மனுச் செய்து கொள்வர்— ஆட்சியாளர்கள், அவைகளை உடனுக்குடன் கவனித்து தொழிலதிபர்களின் நலனைக் காப்பர் —ஆனால் தொழிலதிபர்கள், கூலியைக் குறைக்கிறார்கள், வேலை நேரத்தை அதிகப்படுத்துகிறார்கள், என்று, தொழிலாளர்கள் 'மனு' செய்துகொண்டால், அது குப்பைக் கூடைக்குப் போய்ச் சேரும். தொழிலதிபர்களையும் வியாபாரக் கோமான்களையும் திருப்திப்படுத்துவதையே அரசாங்கம் முக்கியமான நோக்கமாகக்கொண்டிருந்தது.

இந்நிலையில், தங்கள் ஒற்றுமையாலும் கட்டுப்பாட்டினாலும், வலிவு பெற தொழிலாளர்கள் முயற்சித்தாலும், அரசாங்கம், சங்கம் அமைத்தல் சட்டவிரோதம் என்று தடுத்தது.

முதலாளிகள், தங்களுக்குள் கட்டுப்பாடு ஏற்படுத்திக்கொண்டு, தொழிலாளரின் வயிற்றிலடிக்க, சங்கம் அமைத்துக்கொள்வர் —அரசாங்கம் அதைத் தடுப்பதில்லை.

தொழிலாளர் சங்கங்களின்மீது அரசாங்கம் எவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டது என்பதை விளக்கும் சம்பவங்கள் பல. அதிலே ஒன்று விசித்திரமானது, அது இது.

போல்ட்டன் எனும் இடத்து மில் முதலாளிகள், தங்களிடம் வேலை பார்த்துவந்த நெசவுத் தொழிலாளர்களை, கூலி விகிதத்தை நிர்ணயித்துக் கொள்ளுங்கள், அதனினும் குறைந்த கூலிக்கு வேலை செய்வதில்லை என்று தீர்மானித்துக்கொள்ளுங்கள், என்று யோசனை கூறினர்; தொழிலாளர்கள் அதன்படியே, கூடிப்பேசினர். பதினைந்து நாட்களாயின, சங்கத் தலைவரும் செயலாளரும் கைதுசெய்யப்பட்டனர், கூடிப்பேசிச் சதிசெய்தனர், என்று வழக்கு, தலைவருக்கு ஓராண்டு செயலாளருக்கு இண்டாண்டுத் தண்டனை விதிக்கப்பட்டது! அவர்கள் சதி ஏதும் செய்யவில்லை, எங்கள் யோசனையின்பேரில்தான் அவர்கள் கூடிப் பேசினர்கள் என்று முதலாளிகளே தொழிலாளருக்குச் சாதகமாகச் சாட்சி அளித்தனர். எனினும் தண்டனை! தொழிலாளர்கள் எக்காரணம் பற்றியோ, யாருடைய யோசனையின் பேரிலாகிலும் சரி, கூடிப் பேசினால், குற்றம்தான். ஏனெனில் அவர்கள் ஒன்று கூடிப் பேசினாலே, ஏதாவது சதித்திட்டம்தான் தீட்டுவர், என்று அரசாங்கம் கூறிற்று.

அதைவிட விசித்திரமான வேறோர் சம்பவமும் நடந்தது, முந்தியது 1818-ல் — இது அதற்கு அடுத்த ஆண்டு.

மான்செஸ்டர் நகரத்தில் 15 நூற்பு நெசவாளிகள், ஏழைகளின் பிண அடக்கச் சடங்குச் செலவுக்காக, மற்ற நெசவாளிகளிடம் தர்மப் பணம் வசூலிக்கச் சென்றனர் — அதற்காக ஒரு கூட்டம் நடைபெற்றது. போலீஸ் நுழைந்தது; அனைவரும் கைது! சதிக் குற்றம்!!

நாங்கள், வேலைநிறுத்தம்பற்றியோ; கூலி உயர்வுபற்றியோ கூடிப் பேசவில்லை, தர்மப்பணம் வசூலிக்க ஏற்பாடு செய்யவே கூடினோம்; இந்தச் சங்கம், தொழிலாளர் சகாய சங்கம், என்று முறையிட்டுக்கொண்டனர். அந்த நகரில் ஏழு வழக்கறிஞர்கள்— அனைவரும் தொழிலாளருக்கு எதிராக வாதிட்டனர். சங்கத்தின் பெயர் எதுவாக இருப்பினும் சரி, நோக்கம் என்னவென்று கூறினாலும் சரி; கூடினீர்கள், அது சதிக்கூட்டம் என்று கூறினர்; அனைவருக்கும் தண்டனை!

ஒருசமயத்தில், கூலி போதாது என்பதற்காக நாற்பதாயிரம் நெசவாளர்கள் வேலைசெய்ய மறுத்துவிட்டனர். முதலாளிகள் சமரசம் காண வழி வகுத்துக்கொண்டிருந்தனர்; தூதுவிட்டனர்; விரைவில் பூசல் தீர்ந்துவிடும் என்பதற்கான குறியும் தெரிந்தது; எனினும் சர்க்கார், இந்த வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்திக்கொண்டிருந்த கமிட்டி உறுப்பினர்கள் ஐவரைக் கைது செய்தது— தண்டனை!

இந்த அடக்குமுறைகளைக் கண்டு அஞ்சிடாமல் இருக்கும் மனஉறுதியை ஓவன்மூலம் புதுக் கருத்துப் பெற்ற தலைவர்கள் தொழிலாளருக்கு ஊட்டினர். நியூலானார்க்போல், இலட்சிய நிலையை அடையவேண்டும், இந்த அடக்குமுறைகளைப் பொருட்படுத்தாதீர்கள் என்று கூறினர்; தொழிலாளர்களிடமும் பாராட்டத்தக்க எழுச்சி காணப்பட்டது. முதலாளிகள் தோல்வி அடையும்படியான சம்பவங்களும் நடைபெற்றன.

1823ல், லிவர்பூல் நகரில் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலையில், தகராறு கிளம்பிற்று; வேலைக்குச் செல்ல மறுத்தனர் தொழிலாளர்கள். நியூகாசில், ஹல், எனும் இடங்களிலிருந்து முதலாளிகள் தொழிலாளர்களைக் கொண்டுவர முயற்சித்தனர்—ஆனால் அந்த ஊர்களிலே இருந்த தொழிற்சங்கங்கள், லிவர்பூல் நகரிலே தொழிலாளத் தோழர்களுக்கு ஏற்பட்டுள்ள துயரை அறிந்து இருந்தனர், எனவே ஆட்கள் கிடைக்கவில்லை. கிளாஸ்கோ நகரிலிருந்து தொழிலாளர் தருவிக்கப்பட்டனர்; தோழமை உணர்ச்சியுடன், லிவர்பூல் தொழிலாளர்கள் அவர்களை அணுகி, நிலைமையை விளக்கினர்; எனவே கிளாஸ்கோகாரர்களும், துரோகச் செயலுக்கு உடன்பட மறுத்துவிட்டனர். லிவர்பூல் தொழிற்சாலை அதிபர், இதற்கிடையில், நூல் வாங்க, லண்டன் சென்றார்—ஆனால் அவருக்குத் தேவையான நூலை உற்பத்தி செய்துதர அங்குள்ள தொழிற்சாலையில் இருந்த தொழிலாளர்கள் மறுத்துவிட்டனர்-காரணம் லிவர்பூல் நகரில் எங்களைப்போன்ற தொழிலாளத் தோழர்களின் வயிற்றிலடிக்கும் உனக்கு நாங்கள் வேலை செய்ய மாட்டோம், என்றனர். முதலாளி திகைத்தான், பணிந்தான்.

இதுபோன்ற சம்பவங்களும், அடக்குமுறையைச் சமாளிக்கும் நெஞ்சு உரமும் தொழிலாளர் உலகிலே வளர்ந்ததால்தான், சர்க்கார், இணங்கவேண்டியதாற்று.

இந்த மகத்தான வெற்றிக்குப் பாடுபட்டவர்களில் பலர், ஓவன் தந்த பாடத்தால் புதுக்கருத்துப் பெற்றவர்கள்.

எனவே, சமரசபுரியை அமெரிக்காவில் அமைத்து, தோல்விகண்டு, கைப்பொருள் இழந்து, திரும்பினாலும், ஓவன், இங்கிலாந்திலே ஏற்பட்ட மாறுதலைக்கண்டு மகிழ்ச்சி அடைந்தார் — விழிப்புற்ற தொழிலாளர்களை பெரியதோர் அணிவகுப்பாகத் திரட்டி இலட்சியத்தை நிறைவேற்றலாம் என்று ஆர்வம்கொண்டார்.

(தொடரும்)


## புதுவையில்

27-11-55 மாலை 6 மணிக்குப் புதுவை ஒதியஞ்சாலைத் திடலில்

பொதுச்செயலாளர்

**இரா. நெடுஞ்செழியன்**

அவர்கட்கும்

**அண்ணா அவர்கட்கும்**

தி. மு. கழக வட்டக்குழுச் சார்பில் வரவேற்பளிக்கப்படும்.

அனைவரும் வருக!

—புதுவை தி. மு. க.

4-பக்கத் தொடர்ச்சி

வைக்கலாம், புல்கானின் வாக்களிக்கலாம், சோ—இன் லாய் சமரசம் பேசலாம், "மாலடோவ் மலர்ந்த முகத்துடன் காட்சி அளிக்கலாம், அமெரிக்காவும்சமாதானம்பேசலாம் ஆனல் இவையெல்லாம் உலக சமாதானத்தை ஏற்படுத்தா—உலகிலே சாந்தி நிலவ, இதோ நாங்கள் தொண்டு புரிகிருேம் பாரீர், என்று கூறுவதுபோலச் சில பண்டிதர்கள் கிளம்பி, யாககுண்டங்களை வெட்டச் செய்தார்கள், டன் டன்ணுகவிறகும் டின் டின்ணுக நெய்யும் கொண்டுவரச் செய்தார்கள், 'கோஷ்டி கோஷ்டி'யாகக் கிளம்பிச் சென்று வேத பாராயணம் செய்து, **வாஜபேய யாகம்** செய்தனர்!

யாகம் நடைபெற்ற இடத்திலே, இப்போதும் வெப்பம் இருக்கக்கூடும்—புல்கானின் வருகிருர்.

**பூனு நகரில், வாஜபேய யாகம் பிரஜாபதி தேவனுக்காக நடத்தப்பட்டிருக்கிறது.**

**ஏழு நாட்கள் நடைபெற்றன, மூன்று நூற்ருண்டுகளாக இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த யாகம் நடைபெற்ற தில்லையாம்.**

நூற்றுக் கணக்கான புரோகிதர்கள், யாக குண்டத்தைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு, வேதமந்திரங்களைச் சொல்ல, ஆயிரக் கணக்கானவர்கள் 'பூஜை புனஸ்காரம்' செய்து புண்ணியம் தேடிட, பம்பாய் மாகாண கவர்னர் அரி கிருஷ்ண மேதாப் இந்த யாகத்தின் மேன்மைபற்றித் தமது மேலான கருத்தினைக் கூற, ஆனே எனும் பழம் பெரும் தேச பக்தர், நோய் வாய்ப்பட்டிருந்த நிலையிலும் அங்கு படுக்கையுடன் எடுத்துக்கொண்டு வரப்பட்டு, அவரும் தமது உரையை அருள, இலட்சம் மக்கள் கண்டு களிபேருவகை பூத்தனர், இந்தத் திங்களில்.

பூனுவில் இந்தப் புண்ய யாகம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில், நேரு பண்டிதர், என் க்ஷேத்திரம் அணையும் தேக்கமும், தொழிலும் வளமும், என்ற தமது பேச்சை **அமிருதசரசில்** அளித்துக் கொண்டிருக்கிருர்.

வாஜபேய யாகத்தை முடித்துக் கொண்டு, பாரதத்தின்பழைய கால முறைப்படி, **வேதகால இரதங்கள்** ஜோடித்து, பலர் 'ரிஷிகளாக'க் காட்சி தந்து, இரத சாரத்யப் பந்தயம் நடத்திக் காட்டினராம்!! — கடைசி நாளன்று,

இராமனும் கிருஷ்ணனும், சேதி நாட்டரசனும், அவந்திதேசாதிபதியும், கர்ணனும் சகுனியும், சகாதேவனும் சல்லியனும், அபிமன்யுவும் பிறரும் புயலெனச் செல்லும் புரவிகள் பூட்டப்பட்ட இரதங்களிலேசென்றனர் என்று புராணம் படிக்கிருர்களல்லவா—அந்தச் செல்லரித்த ஏடுகளில் காட்டப்படும் காட்சிகளைக் காண, வேதகால இரத சாரத்யக் காட்சியை ஏற்பாடு செய்து காட்டினர் — பல்லாயிரவர் கண்டனர்—பரவசமடைந்தனர்.

அதேபோது, டில்லிப் பட்டினத்தில் வேருேர் ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. புல்கானின் விஜயத்தின் போது, உற்சாகமிகுதியால் இலட்சக்கணக்கில் கூடிடும் மக்கள் கட்டுக்கடங்காது போவர் என்ற கவலையால், போலீஸ் அதிகாரிகள் ஹெலிகாப்டர் விமானத்தில் ஏறிக்கொண்டு, மேலே தாழ்வாகப் பறந்துகொண்டே, மக்களை ஒழுங்குபடுத்தும் திட்டம் தயாரிக்கிருர்கள்.

**பூனுவில், வேதகால இரதம் ஓடிக்கொண்டிருக்கிறது,**

**டில்லியில் ஹெலிகாப்டர் விமானம் தயாராகிறது!!**

'பாரதம்' எவ்வழி செல்கிறது என்று கூற முடியும்? யாக குண்டமும் தெரிகிறது விஞ்ஞானக் கூடமும் அமைக்கப்படுகிறது, இரதமும் ஓடுகிறது ஹெலிகாப்டரும் பறக்கிறது! புல்கானின் வரவேற்கப்படுகிருர், சவுதி அரேபிய மன்னருக்கும் இராஜஉபசாரம் தயாராகிறது.

மேதாப் பேசுகிருர், பாரதம் யாக யோகாதிகளிலே சிறந்த தேசம்,—என்று.

நேரு பண்டிதர் அதே கிழமை வேருேர் பகுதியிலே பேசுகிருர், இன்னமும் நாம் சாணியுகத்தில் தான் இருக்கிருேம்,—என்று.

உலகம் அணுயுகத்தில் இருக்கிறது — பாரதம் சாணியுகத்தில் இருக்கிறது, என்று கூறுகிருர் நேரு பண்டிதர் — மனம் நொந்து கூறுவதுபோலத்தான் இருக்கிறது.

அவர் இவ்விதம் கேலியும் வேதனையும் கலந்த குரலில் எந்தச்சாணியுகம் பற்றிக் குறிப்பிடுகிருரோ, அதைச் சிலாக்கியமானது, என்று புகழ்ந்து பேசி, வாஜபேய யாகத்தைத் துவக்கிவைக்கிருர் கவர்னர் மேதாப்! எல்லாம், பாரதத்தில்! எதுதான் நமக்கு உரியது? எவ்வழிதான் நல்வழி? எந்த முறையைப் பின்பற்றப்போகிறீர்கள்? என்று கேட்டாலோ, தலைவர்கள் கோபம் கொள்கிருர்கள்—குழப்பம் அடைகிருர்கள், இவர்கள் இவ்விதம் தான் 'பத்தாம்பசலிகள்'. பண்டிதர் அப்படிப்பட்டவர் அல்ல, அவர் தான் காசி அரித்துவாரம், சேது சீரங்கம் திருப்பதி தில்லை, இவைகளல்ல என் திவ்ய க்ஷேத்திரங்கள்; என் திவ்ய க்ஷேத்திரங்கள், தேக்கம் அணை, சிந்திரி சித்தரன்ஜன், என்ஜின் எழில், என்று பேசுகிருரே, அவர் நாட்டினை, அறிவுலகத்தின் சார்பில் நடத்திச் செல்வார், விஞ்ஞானப் பாதை வழி நடத்திச் செல்வார் என்று எண்ணித் தெம்பும் தைரியமும், நம்பிக்கையும் பெறலாம் என்ருலோ, இவ்வளவு பகுத்தறிவும் பேசிவிட்டு, அவரும் இராமலீலா பார்க்கச் செல்கிருர், பேரப்பிள்ளைகளுடன்! அவரும் இவ்வளவுதான் என்று தெரிகிறபோது ஆயாசப்படாமல் என்ன செய்வது?

அந்த வாலிபன் பதறினுன் இளம் பெண் பதைபதைத்தது கண்டு! அவள் அழுகுரல், அவன் இதயத்தைத் துளைத்தது. ஐயயோ! என்று அணங்கு அலறுகிருள், அந்தோ! கொடுமை! கொடுமை! என்று கூவுகிருன் இளைஞன்.

பெருநெருப்பிலே பெண்ணை இறக்கினர். புத்தாடை உடுத்திக் கொண்டாள் பூவை—மஞ்சள் குங்குமம் இட்டுக்கொண்டு, மாங்கலியத்தை எடுத்துக் கண்களிலே ஒற்றிக்கொண்டு, மாமி மாமன் காலில் விழுந்து வணங்கிவிட்டு, சூழநின்ற சுற்றத்தாரைக் கலங்கிய கண்களுடன் பார்த்துக் கும்பிட்டு, விட்டுப், பிணக்குழியைப் பற்றிக் கொண்ட பெருநெருப்பை மும்முறை வலம்வந்து, "ஈசா! இதோ நானும் என் நாதனுடன் வருகிறேன், ஏற்றுக்கொள். பதியை இழந்து பாவை புவியில் வாழ்வது பெரும் பாபம், எனவே இதோ, உடன் கட்டை ஏறுகிறேன், உன் திருவடியில் சேர்த்துக்கொள்!" என்று பிரார்த்தனை செய்கிருள்.

"உத்தமி உடன் கட்டை ஏறுகிருள், பத்தினி, பர்த்தாவுடன் செல்கிருள் — அவளுடைய பாத தூளி பட்டாலே பாபம் சம்ஹரிக்

கப்படும், உடன்கட்டை ஏறிடும் காட்சியைக் கண்டோருக்குக் கர்மம் கழுவப்படும்; கடவுளருள் கிட்டும்" என்று பயபக்தியுடன் பேசுகின்றனர்.

பத்தினிப் பொண்ணு
பாரதக்கண்ணு

என்று பாடுகிறார்கள்; தாளம் கொட்டுகிறார்கள்.

தீயின் அருகே செல்லச் செல்ல, அவள் கண்களிலே ஓர் மிரட்சி ஏற்படுகிறது; வாலிபனுக்கு அது விளங்குகிறது.

"ஜெய்மகாதேவ்! ஜெய்சங்கர்! ஜெய்சீதாராம்!" என்று கோஷம் கிளம்புகிறது.

ஆயிரம் நாவுகள் படைத்த கோர உருவம்போல, நெருப்புத் தெரிகிறது,பெண்மணியின்கண்களுக்கு! எனினும் அவள் அருகே செல்கிருள்.

மகளே! அருமை மகளே! என்று தாய் அழுது என்ன பயன்? அவள் உத்தமி பத்தினி, எனவே அவள் சுட்டுச் சாம்பலாக்கப்பட வேண்டியவள்! இளம்பெண், இந்த வயதில் இந்தக்கதி என்று சிலர் பச்சாதாபப்படலாம் ஆயினுமென்ன, அவள் பாரதப்பெண்—பதி பிணமானுன்,அவன் உடல் அதோ நெருப்பில், இவள் இனி பூவுலகில் இருப்பானேன். உயிருடன் இருந்தபோது யாருடன் மஞ்சம் ஏறி கொஞ்சிக்கிடந்தாளோ அவனுடன் தான் இப்போதும் இருக்கவேண்டும். அதுதான் பாரதப் பண்பாடு. போ, மகளே, போ, நாதன் இருக்குமிடத்துக்குத்தான் நாயகி செல்லவேண்டும். அது மலர் தூவிய பஞ்சணையானுலும் சரி, கொழுந்துவிட்டெரியும் நெருப்பானுலும் சரி, அதுதான் உன் இடம்: போடி பெண்ணே, போ, போ. நெருப்பு அணைந்திடுவதற்குள் போ. நீறு ஆகிவிடுவாய், நேராகச் சொர்க்கம் சேர்ந்திடுவாய். சதியும் பதியும் இணைபிரியாமல் வாழ்வீர்கள். அவன் செல்கிருன், உன்னை அழைக்கிருன், போடி மகளே, போ."—என்று பாரதப் பண்பாடு கூறுகிறது. அந்தப் பெண் செல்கிருள் — வாலிபன் பதைக்கிருன். நெருப்பில் இறங்குகிருள்,

"ஐயோ" என்று அலறித் துடித்து, அதைவிட்டு வெளிவர எழுகிருள், நீண்ட கம்புகளைக் கொண்டு 'சாஸ்திர சம்பிரதாய ரட்சகர்கள்' அவளை மீண்டும் நெருப்பில் தள்ளுகிருர்கள். அவள் உடலைத் தீ பற்றிக்கொள்கிறது—வேதனையால் துடிக்கிருள்—வேதமுணர்ந்தவர்கள் அவள் தீக்குண்டத்தைவிட்டு வெளி ஏருவண்ணம், கோல்கொண்டு தடுத்து, அவளைப் பிணமாக்குகிருர்கள். பாரதத்துக்கு மற்ருேர் பத்தினி கிடைத்துவிட்டாள். ஆனல் ஒரு ஒப்பற்ற சீர்திருத்த வீரனும் கிடைக்கிருர். அவர்தான்

**இராஜாராம் மோகன்ராய்.**

தன் அண்ணி, உடன்கட்டை ஏறியபோது, வைதீக வன்கணாளர்கள் காட்டிய குரூரத்தைக் கண்டபோதுதான், இராஜாராம் மோகன்ராய், மடைமையினுல் விளையும் கொடுமை குறித்து உணர முடிந்தது. சுடலையில் அவர் எடுத்துக்கொண்ட சூளுரையை நிறைவேற்ற அவர் இந்தியாவில் மட்டுமல்ல, இங்கிலாந்துவரை சென்று போரிட்டார் — வெற்றி கண்டார். சதி சட்டப்படி தடுக்கப்பட்டது. வைதீகர்கள் அவர்மீது காட்டிய குரோதம் கொஞ்சமல்ல, அவர்கள் சாஸ்திரத்தை, யுகயுகமாக இருந்து வந்த சம்பிரதாயத்தை எடுத்துக் கூறினர். ராஜாராம்மோகன்ராய்க்கு சுடலையில் கண்ட காட்சி உடனே மனக் கண்ணில் தெரியும், அவர் இதயத்தில் பெருநெருப்பு மூளும், பொறிகள் வார்த்தைகளாகி வெளிவந்து, வைதீகத்தைச் சுட்டுச் சாம்பலாக்கிற்று.

சதியை ஒழித்தார் இராஜாராம் மோகன்ராய்!

நான் அறிவேன்! நான் அறிவேன்! உடன்கட்டை ஏறுவது என்பது எவ்வளவு கொடுமை என்பதை நான் அறிவேன். என் கண்ணுல் கண்டேன், அலறினுள், துடித்தாள், உயிருக்காக மன்ருடினுள், உலுத்தர்கள் என்ன செய்தனர்? கோல்கொண்டு அவளை நெருப்பில் தள்ளினர்—உயிர் கருக்கினர்.

அபலையின் அழுகுரலைக் கேட்டால், கன்னெஞ்சக்காரனுக்கும் கருணை பீறிட்டெழும். அந்த அழுகுரல் பிறர் செவியில் விழக்கூடாது என்பதற்காக வைதீக வெறியர்கள், காது செவிடுபடும்படி சங்கம் ஊதினர், தாளம் தட்டினர், மேளம் கொட்டினர், பஜனைச் சத்தமிட்டனர், எல்லாம் ஒரு பெண்ணைப் பிணமாக்க; தங்கள் பைத்யக்கார முறையை வாழவைக்க, நான் கண்டிருக்கிறேன் அந்தக் கயமையை— என்று இராஜாராம் கர்ஜனைபுரிந்தார்; தர்க்கம் நடத்தினுர்; ஏடுகள் தீட்டினுர்; வாதுக்கு வந்தோரை முறியடித்தார்; வஞ்சகரின் எதிர்ப்புகளைச் சமாளித்தார், சீமைசென்று பேசினுர்; பார்லிமென்டில் சொற்பெருக்காற்றினுர்; வென்ருர்; சதி எனும் மடைமையைக் கொன்ருர்.

பாரதத்தில் இப்போது இங்கொன்றும் அங்கொன்றுமாக 'சதி' நடக்கிறது.

சட்டம் இருக்கிறது; எனினும் 'சதி' நமது பாரதப் பண்பாட்டின் சின்னம் என்று கருதுவோர் இருக்கிருர்கள்; அவர்களிடம் ஒரு புதுத் துணிவும் காணப்படுகிறது.

> "மதுந்தா என்ற இடத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தன் கணவர் இறந்துவிட்டதும் அவருடனேயே 'உடன்கட்டை' ஏறியதாகச் சென்ற கிழமை ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.
>
> தனதுகணவன் உடல் எரிந்து கொண்டிருக்கும்போது, மஞ்சள் நிற சேலை அணிந்துகொண்டு கழுத்தில் ஒரு மாலையுடன் தோன்றி மயானத்தில் கூடியிருந்தவர்களிடம் தான் உடன்கட்டை ஏறப்போவதாகத் தெரிவித்துவிட்டு நெருப்பில் குதித்துவிட்டாளாம்.
>
> அந்தப் பெண்ணை எவரும் தடுத்து நிறுத்தியதாகத் தெரியவில்லை.
>
> நெருப்பில் விழுந்த அந்தப் பெண், துடித்துத் துடித்து அலறினுளாம். ஆனல் அந்த அலறலைவிட அதிக உரத்த தொனியில் தாரை, தப்பட்டைகள் முழங்கினவாம்; குருக்கள்மார் வேதங்கள் ஓதினராம், சில நிமிட நேரத்தில் அந்தப் பெண் சாம்பலானுளாம்."

ராஜ்கோட்
நவ 2

"இந்தியாவிலுள்ள சாதுக்களில் பெரும்பாலோர் அட்டைப் புழுக்களைப்போல பிறரை உறிஞ்சி வாழ்பவர்கள்; சமூகத்திற்கு விரோத சக்திகள். நாட்டிலுள்ள 55 லட்ச சாதுக்களில் 15000 சாதுக்களே உண்மை சன்யாசிகளாக இருக்கக் கூடும்."

—நேரு.

நாடு, எவ்வழி நடத்திச் செல்லப் படவேண்டும் என்பதில் ஓர் திட்ட வட்டமான கொள்கையில்லாத தால், விளையும் கோரங்களில் இஃ தொன்று. வேறென்ன?

பாபு இராஜேந்திர பிரசாத் தமிழ கத்துச் சுற்றுப் பயணத்தில் ஓரி டத்தில்,

"நாடு இப்போதுபழையகாலத்தி லும் இல்லை; புதிய காலத்திலும் இல்லை, இவை இரண்டும் போட்டி யிடும் ஓர் இடைக்காலத்தில் இருக் கிறது" என்ற கருத்தைக் கூறி யிருக்கிறார்.

அவர், பழைமையின் பக்கமா, புதுமையின் சார்பிலா என்பதை அறிவிக்கவில்லை. அவருடைய அலுவல்கள் அதனை அறிவிக் கின்றன.

திருப்பதியில் தெரிசனம், சமஸ் கிருத பரீஷத்தில் பிரசன்னம், மடாதிபதியின் சமயப் பிரசார ஸ்தாபனத்தில் பேச்சு — இப்படி அவர் அலுவல்கள்.

மதத்தின் பெயர் கூறிக்கொண்டு எப்படிப்பட்ட மூடத்தனத்தையும் செய்யவைக்கலாம் என்ற நெஞ் சழுத்தம், வைதிகத்தின் துணை கொண்டு ஆதிக்கம் செலுத்து பவர்களுக்கு இன்று ஏற்பட்டிருக் கிறது. யாராருக்கோ 'யோகம்' அடிக்கிறது. மனிதர்களைத் தள்ளி விடுங்கள். **நாய்க்கு அடித்திருக்கிறது, யோகம்!** மஞ்சள் குங்குமம் தடவி, மலர் சூட்டி, விருந்து வைத்துப் பூஜை செய்திருக்கிறார்கள், நாய் களுக்கு!

இங்கு, நாம் தம்பிரான்களுக்கு ஏனய்யா தங்கப் பாதக்குறடு, சைவத்தைப் போற்றுகிறேன் என்று கூறிக்கொண்டு ஏன் மாமிச மலைகளைப் பல்லக்கில் ஏற்றிச் சுமந்து திரிகிறீர்கள் என்று கேட் கிறோம்.

சங்கரர் தந்து சென்ற அறிவு விளக்கம் ஆத்மீக வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கிறது என்று கூறிக்கொண்டு, பாதபூஜை செய் தால் பவப்பிணி போகும் என்று நம்பிக்கொண்டு, காலைக் கழுவி நீரைக் குடிக்கிறயே, என்ன கேவல மான புத்தி ஐயா! உனக்கு என்று கேட்கிறோம்.

இப்படியா கேட்கிறாய், என்னைத் திருத்த நீ யார், என் விருப்பம் போல் நான் செய்வேன், எனக்கு நற்கதி கிடைக்கவேண்டும் என்ப தற்காகப் புனித ஏடுகளிலுள்ளதை பூஜிதர்கள் கூறுவதைக் கேட்டு நான் நடந்துகொள்வேன், அதைத் தவறு, அறிவீனம் என்று விளக் கிட நீ ஆயிரம் காரணம் காட்டு வாய், அதனாலென்ன, நீ சொல்வ தாவது நான் கேட்பதாவது என்று நம்மிடம் வாதாடுகிறார்கள். வைதி கத்தின் பிடியிலுள்ள மக்கள் நாய்க் குப் பூஜை செய்திருக்கிறார்கள்— புல்கானின் வருகைக்காக நாடு விழாக் கோலம் கொண்டிருக்கிற இப்போதுதான்!

இப்போது, டில்லியில் வரவேற் பும், பம்பாயில் இராஜோபசாரமும் பெற்றுக்கொண்டிருக்கிறாரே, இந் தியாவின் நண்பர் நேபாள மன்னர் —அவருடைய நாட்டில்.

நாய்கள், மங்கள ஸ்நானம் செய் விக்கப்பட்டு, மஞ்சள் குங்குமம் அணிவிக்கப்பட்டு, மாலைகள் சூட் டப்பட்டு, காத்மாண்டு நகரவீதிகளில் செல்கின்றன! கல்லடிபட்டுக் கொண்டும், எச்சில் இலை பொறுக் கிக்கொண்டும், ஒன்றுக்கொன்று கடித்துக்கொண்டும், குரைத்துக் கிடக்கும் இந்த நாய்களுக்கு, இப் போது விசேஷ விருந்து அளித்து விழுந்து கும்பிடுகிறார்கள்.

யமதர்மராஜனுடைய வாசலில் இரண்டு நாய்கள் காவலாம்.

நாய்களுக்கு இங்கு இந்தப் பூஜை செய்தால், யமதர்மனுக்குத் திருப்தியாம்.

யமனுக்குச் சந்தோஷம் என்றால் என்ன—மரணபயம் கிடையாது.

எனவே இந்த **நாய் பூஜை** நடக்கிறது—தீபாவளிப் பண்டிகை யின்போது.

நாய்க்கு நடத்தப்படும் பூஜை போலவே, எருமைக் கிடாவுக்கும் பூஜையாம்.

நேபாளநாட்டுத் தீபாவளி இவ் விதம் இருக்கிறது.

இங்கே பசுவுக்குப் பூஜைசெய் வோரும், பாம்புக்குப் பாலூற்று வோரும், செச்சே, இது என்ன பைத்யக்காரத்தனம், நாய்க்குப் பூஜையா, மஞ்சள் குங்குமமாம், மாலை மரியாதையாம், பூஜையாம் நாய்க்கு. இதுவா பக்தி? இதுவா மதம், என்று கேலிபேசுவர்.

இங்கு பசு, பாம்பு—அங்குநாய்.

எல்லாம், மதத்தைப்பற்றி மன திலே குடிகொண்டிருக்கிற மயக் கத்தின் விளைவுதான்.

நாய்களுக்குப் பூஜை செய்யும் நாடு நேபாளம், என்று ஒருமேயோ கூறிவிட்டால் மட்டும், கோபம் கொப்பளித்துக்கொண்டு வருகி றது; நாம் மதத்தின் பெயரால் மூடத்தனம் நிலவுகிறது என்று கூறினாலோ, ஏடா, மூடா, எமது மார்க்கத்தில் பொதிந்து கிடக்கும் ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் நீ அறிவாயா? என்று பேசிடும் பெரியவர்கள் கிளம்பிவிடுகிறார்கள், இதோ நாய்களுக்குப் பூஜை நடக் கிறது.

அருவருப்பு அடைவோர் இல்லை, வேண்டுமானால், விஷயம் கேள்விப் பட்டதும், இங்கு அந்தப் பூஜை முறையின் விவரம் தெரிந்து கொள்ள ஆவல்கொள்வோர் கிடைப்பர்.

"நாய் என்றால் கேவலம் என்று பொருளா? தெரியுமா, பைரவர் என்று நமது புனித ஏடுகளில் கூறப்பட் டிருப்பது, அவருக்கு வாகனம் நாய் தான்" என்று ஆதாரம் பேசுவர் பஜனைக் கூடத்தார்.

நாயைக் கும்பிடுவதுபற்றி இந்த குருமானுகள் கேலி பேசுகிறார் களே, நாயிடம் கொஞ்சி விளையாட லாமா, நாய்க்கு பிஸ்கட்டும் பாலும் கொடுப்பதைக் கண்டித்தார்களா? நாய் வளர்த்து, நம்மையும் நாய் வளர்க்கப் பழக்கப்படுத்திய வெள் ளைக்காரனைக் கண்டித்தார்களா? நாய், சுதந்திரப் போருக்குத் தியா கம் செய்தது இவர்களுக்குத் தெரி யுமா? நாய் செய்த தியாகம்கூடச் செய்யாதவர்கள்தான் இந்தச் சூ. மா. க்கள், கேளீர், கதையை. சத்யாக்கிரகத் தொண்டரைத் தாக்க ஒரு வெள்ளைக்கார வெறி யன் ஓடிவந்தான். கையில் துப் பாக்கி, நெஞ்சில் வஞ்சகம், சத்யாக் கிரகி என்ன செய்வான்? ஓடாதே, கோழையாகாதே என்று மனம் கூறிற்று. புத்தியோ, ஓடு ஒளிந்து கொள். அது கோழைத்தன மாகாது, பாரததேவியின் விலங் கினை ஒடித்திட நீ சேவை செய்ய வேண்டும், அதற்காக உயிர் வாழ வேண்டும், எனவே இப்போது உயிரைக் காப்பாற்றிக்கொள் என்று இடித்துரைத்தது. அவன் ஓடினான், அவன் ஓடினான்,

---

**நன்றி**

21-10-55ல் திருப்பரங்குன்றத்தில், என் சகோதரி ஜெக்ஜோதிக்கும், ப. மு. நடராச னுக்கும் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு வந்திருந்தவர்களுக்கும், பரிசுகள் தந்திகள் அனுப்பிய நண்பர்கள் அனைவருக் கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடிமை இந்தியா ஓடிற்று! ஆங்கில ஏகாதிபத்யம் துரத்திக்கொண்டு வந்தது. அப்போது கேவலம் ஒரு நாய்—ஆனால் பாரதத் திருநாட்டிலே பிறந்து வளர்ந்த நாய், கிளம்பிற்று வீராவேசமாக! நாய் பாரதத்தின் சேய்! என்ற உரிமையுடன், முழக்கமிட்டது; வெள்ளையன் மேலே பாய்ந்தது, குரல்வளையைக் கடித்தது; அவன் திணறினான், கூவினான், ஏகாதிபத்யம் மரணக் கூச்சலிட்டது; நாய் பாரத மண்ணிலே பரங்கி ஆதிக்கமா, என்று கேட்கவில்லை, ஆனாலும், தேசபக்தர்களின் பேச்சு, அந்த நாயின் உள்ளத்திலேயும் வீராவேசத்தை ஊட்டிவிட்டிருக்க வேண்டும்—எனவே அது புலியாயிற்று. போர், கடும்போர், பைரவருக்கும் பரங்கிக்கும் போர் மூண்டது. இறுதியில், அந்தப் பாதகன், பரங்கி, தன் கைத்தடியால் நாயின் மண்டையில் ஓங்கி அடித்தான்—இரத்த வெள்ளம்—கடைசி முழக்கம்—நாய் மண்ணிலே பிணமாயிற்று—செத்தும், அதன் கண்கள் மூடிக்கொள்ளவில்லை—அன்னியனை விடமாட்டேன் என்று அப்போதும்கூறுவதுபோலிருந்தது.

அப்படிப்பட்ட 'நாய்' சேவை செய்ததை அறியாத இந்த அறிஞர்களும் பெரியார்களும், இப்போது நாய் பூஜை செய்வதைக் கேவலமாகப் பேசுகிறார்கள். இதைத் தேசியவாதியாகிய நான், செக்கிழுத்த சிலரின் வழி நிற்கும் நான், அனுமதிக்கமாட்டேன் — என்று பேசி, தங்கள் திறமையைக் காட்டிக்கொள்ளவும் சிலர் உண்டு—ஒருவராவது, இது என்ன கேவலப் போக்கய்யா, நாயைப் பூஜித்தா நாதன் அருளைப் பெறுவதுஎன்று கேட்கமாட்டார்கள்? ஏன்? நாதன் அருள்பெற்றதற்காகக் கூறப்பட்டுள்ள புண்ய காதைகளில், இதைவிட அருவருப்பான நிகழ்ச்சிகள் உள்ளன — படித்தும் பக்கநின்று கேட்டும் பரவசப்படும் நாடாயிற்றே!

நாய்களுக்குப் பூஜை செய்வது, கேவலம்தான், ஆனால் அதைக் கேட்டால், கைகொட்டிச் சிரித்திடத்தான் தோன்றுகிறது, வேறென்ன என்பார்கள்.

கேட்டதும், கோபமும் வேதனையும் கிளம்பத்தக்க செயலிலும், மதத்தின் வழி நிற்பதாகக் கூறிக்கொள்வோர், இப்போது ஈடுபடுகிறார்கள்.

வாரீர், வணங்கிடும்வோம் வாரீர், இந்த உத்தமனை மறவாதீர், இவன் நமக்காக, நமது ஜீவனும் இந்து மதத்துக்காக சர்வபரித்தியாகம் செய்த மகான்—மாவீரன். உயிரைத் துச்சமென்று எண்ணி, மார்க்கத்தை இரட்சித்த மகா புருஷன். நமது புராதன மார்க்கமாம் இந்து மார்க்கத்துக்கு பேராபத்து நேரிடும்போதெல்லாம், இப்படிப்பட்ட 'ரட்சகர்' அவதரிப்பது நமது பாரதத்துக்கே தனிச் சிறப்பளிக்கிறது. இந்தப்பாரத வீரனை, இந்து மார்க்க ரட்சகனை, மதக்காவலனை, கொண்டாட வாரீர் — என்று அழைத்திருக்கிறார் ஒரு பாரத்வாசி.

இவ்வளவு புகழுரைகளும் அர்ச்சித்துக் கொண்டாட வரும்படி கூறுவது, யார்பொருட்டு, மகாத்மா காந்திக்காகத்தானே. அந்த மகானுக்குத்தானே இந்தக் கொண்டாட்டம் என்று கேட்பீர்கள், மூர்ச்சையாகிவிடாதீர்கள், இது மகாத்மாவின் நினைவு நாள்கொண்டாட்ட அழைப்பு அல்ல — அவரைச் சுட்டுக் கொன்றானே கோட்சே அவனுக்காக.

ஆமாம், தம்பி! ஆமாம், பகிரங்க அழைப்பு, கொண்டாட்டத்துக்கான ஏற்பாடு!!

1949-ம் ஆண்டு நவம்பர் 15-ல்' அம்பாலா சிறையில், அகிலம் போற்றிய உத்தமர் காந்தியாரைச் சுட்டுக் கொன்ற உலுத்தன், ஆரிய கோட்சே, தூக்கிலிடப்பட்டான்

இந்த நவம்பர் 15-ந் தேதி, இந்தக் கொலைகாரனுடைய ஆறாவது ஆண்டு நினைவு நாள் கொண்டாட்டம் நடத்த குவாலியரில், தண்டாவாடே எனும் இந்துமகாசபைக்காரன் தன் சகாக்களுடன் கூடி ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தான்.

மகாத்மா கொல்லப்பட்ட வழக்கிலே இவனும் சிக்கினான்—விடுதலை செய்யபப்பட்டான்.

இனுக்கு, நேருபண்டிதரின் ஆட்சி இருக்கும் போதே, கொலைகாரக் கோட்சேயை அவதார புருஷன் போலக் கொண்டாட்டம் நடத்திப் பாராட்டும், துணிவு ஏற்பட்டு விட்டது! ஏன்? மார்க்கரட்சசன் கோட்சே! இந்துமதத்தைக் காப்பாற்றவே காந்தியைக் கொன்று, தன் உயிரைப்பலி கொடுத்தான் என்று பேசிட, பெருமைப்பட, உற்சாகமூட்ட இந்துமத வெறி இடமளிக்கிறது!!

கலாம் விளையும் என்று காரணம் காட்டி அவன் போலீஸ் காவலில் வைக்கப்பட்டான்.

பாரதநாடு தவிர வேறெங்கு இத்தகைய 'பாதகன்' துணிவு பெற முடியும்.

நாட்டிலே இன்றும் கப்பிக் கொண்டிருக்கும் குருட்டறிவை, கொலைகார கோட்சே கும்பல் நம்பிக் கொண்டு இருக்கிறது, என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக் காட்டாக இருக்கிறது.

நாய்க்குப் பூஜை செய்கிறார்கள்!

கொலைகாரனுக்குக் கொண்டாட்டம் நடத்த முயற்சிக்கிறார்கள்!!

இவை யாவும் எதன் விளைவு? பழமைக்குப் பாதுகாவலராக ஆளவந்தார்கள் உளர் என்ற நிலைமை தான்.

பாபு இராஜேந்திர பிரசாத் கூறியது போல, பழமைக்கும் புதுமைக்கும் இடையிலே உள்ள ஓர் கொந்தளிப்பில் நாடு இருக்கிறது, ஆனால் ஆளவந்தார்கள், நிச்சயமாக! பழைமையின் பாதுகாவலர்களாகத்தான் பணியாற்றிவருகிறார்கள். புதுமையை அவர்கள் அடியோடு விலக்கிடவில்லை, இயலாததாலும், அதன் இனிமை அவர்களுக்குச் சுவை அளிப்பதாலும்.

ஆனால் இந்தத் தலைமுறையில் நாடு எவ்வழி செல்வது என்பது பற்றி முடிவு எடுத்தாக வேண்டும்—ஹெலிகாப்டரா? வேதகாலஇரதமா?—என்பது தீர்மானமாகிவிட வேண்டும்.

அன்பன்,

**அண்ணாத்துரை.**

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு ''திராவிட நாடு'' அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.